www.padippakam.com

டிசம்பர் 1986 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை ரூ. 1-50

# புதிய கலாச்சாரம்



## ஈழத்தில் பொம்மை ஆட்சி நிறுவ ஜெயவர்தனா ராஜீவ் சதி

படிப்பகம்

www.padippakam.com

# எட்டிப்பாருங்கள்....

## தீபாவளியும் நவம்பர் புரட்சியும்

கோர்ப்பசேவின் இந்திய வரவையொட்டி சென்னை வானொலியில் ஒரு நிகழ்ச்சி ஒலி பரப்பப்பட்டது. தமிழறிஞரான ஒரு ரசியரை பேட்டி கண்டார் அகில இந்திய வானொலி நிருபர். அந்த 'ரசிய தமிழறிஞர்' மிகவும் சிரமப்பட்டு கேள்விகளுக்குத் தமிழில் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

"இந்தியத் திருவிழாக்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் பேட்டியாளர். "ஓ தீபாவளிப்பண்டிகை இந்தியாவில் பிரபலம் என்று எனக்குத் தெரியும். எங்கள் ரஷியாவிலும் திருவிழாக்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, நவம்பர் புரட்சி திருவிழா. நம் இரு நாட்டுத் திருவிழாக்களுக்கும் பல ஒற்றுமைகள் கூட இருக்கின்றன" என்றார்.

'என்ன ஒற்றுமை' என்று ஆர்வமாகக் கேட்டார் பேட்டியாளர். "இரண்டுமே தீய சக்திகளை எதிர்த்து நல்ல சக்திகள் வெற்றிபெற்றதைக் கொண்டாடும் திருவிழாக்கள்தானே" என்றார் அந்த 'ரஷிய தமிழறிஞர்'.

புராணத்தின் அடிப்படையிலான இந்துமத பண்டிகையும் மக்கள் பங்கேற்ற புரட்சியும் அடிப்படையில் ஒன்றுதானாம். எப்படி இருக்கிறது? ரொம்பவும் கஷ்டப்பட்டு தமிழ் பேசுகிறாரே என்று கவனித்தால், நீண்டநாள் ஊமையாயிருந்த குழந்தை பேசத் தொடங்கியவுடன் 'நீ எப்போம்மா தாலி அறுப்பே' என்று கேட்ட கதையாக இருக்கிறது.

## பகல்கொள்ளைக்காரன் பிக்பாக்கெட்டை பிடித்த கதை

பம்பாயிலிருக்கும் அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகளில் மனித உடலுறுப்புக்களைத் திருடி விற்கிறார்கள் என்பது பல்வேறு பத்திரிக்கைகளால் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

விவரம் புரியாத கிராமப்புற விவசாயிகள் மற்றும் நகர்ப்புற ஏழை மக்களை அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லி மருத்துவமனையில் படுக்கவைத்து அவர்களது சிறுநீரகங்களில் ஒன்றைத் திருடிக் கொள்கிறார்கள். கண் நோய்க்காக வருபவர்களை ஏமாற்றி ஒரு கண்ணை பறித்துக் கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அல்லது பம்பாயில் சிகிச்சை பெற்றுக்கொள்ள வருகின்ற அராபிய ஷேக்குகளுக்கு மாற்று உறுப்புகள் தேவைப்படும் போது இப்படித் திருடிச் சேர்த்து வைத்திருக்கும் மனித உறுப்புகளை விற்றுவிடுகிறார்கள்.

இந்த திருட்டு எந்தெந்த மருத்துவமனைகளில் நடைபெறுகிறது என்ற விவரம் உள்பட பல பத்திரிக்கைகளில் அம்பலமாகிவிட்டது. ஆனால் மகாராஷ்டிர அரசு இப்போதுதான் இதைப்பற்றிக் கேள்விப்படுவது போல நடித்திருக்கிறது. பின்னர் "உங்கள் மருத்துவமனையில் மனித உறுப்பு விற்பனை நடக்கிறதா?" என்று கேட்டு எல்லா மருத்துவமனைகளுக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறது. சிலர் இல்லையென்று மறுத்துள்ளனர். பலர் பதிலே சொல்லவில்லை. இது என்ன சட்டபூர்வ வியாபாரமா, 'ஆமாம்' என்று ஒத்துக் கொள்வதற்கு!

விசாரணை முறையிலிருந்தே திருடர்களைப் பிடிப்பதில் அரசுக்குள்ள வேகம் தெரியவில்லையா? அதோடு திருடர்களின் கட்சி திருடர்களை எப்படி தண்டிக்க முடியும்? ○

## சி.ஐ.ஏ.வுடன் இந்திரா-ராஜீவ் கும்பல் கள்ள உறவு!

அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்வது, ஆட்சி கவிழ்ப்பது, புரட்சிகர இயக்கங்களை நசுக்குவது முதலான சதிகளை அரங்கேற்றும் பிணந்தின்னிகளது நிறுவனம்தான் சி. ஐ. ஏ. என்பது உலகறிந்த உண்மை.

இந்த அமெரிக்க கொலைகார உளவு நிறுவனத்திற்கு கடந்த பத்தாண்டு காலமாக ரகசியமாக ஆயுத விற்பனை செய்துள்ளது இந்திய அரசு என்ற செய்தி சமீபத்தில் அம்பலமாகியுள்ளது. 1983ல் மட்டும் 3.6 கோடி ரூபாய் மதிப்புள்ள துப்பாக்கிகளும் வெடி மருந்துகளும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சகம் மூலம் விற்கப்பட்டுள்ளது. இந்திய அரசு இதுவரை இச்செய்தியை மறுக்கக்கூட இல்லை.

இதே போலத்தான் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசை எதிர்ப்பதாக கூப்பாடு போடும் ராஜீவ் அரசு தென்னாப்பிரிக்காவுடன் வைர இறக்குமதி, திரைப்பட இறக்குமதி, துணி ஏற்றுமதி முதலான வர்த்தக உறவை ரகசியமாக நடத்திக்கொண்டு வருகிறது.

இந்தியப் பிற்போக்கு அரசின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் கூட்டுச் சேராக் கொள்கையின் லட்சணம் இதுதான். இந்திய தேச விரோத ஆட்சியாளர்களின் அரசியல் பித்தலாட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும். சி. ஐ ஏ.வுக்கு ரகசியமாக ஆயுதங்கள் விற்ற பாசிச இந்திராவின் வெளிநாட்டுக் கொள்கையை முற்போக்கானது என்றார்களே போலிக் கம்யூனிஸ்டுகள், அவர்கள் எவ்வளவு பெரிய பித்தலாட்டக்காரர்கள்?




படிப்பகம்

www.padippakam.com

...லை இலக்கியம்
...வும் மக்களுக்கே!

...பேர் : 4
...ரல் : 7
டிசம்பர்'86

...ண்டுச் சந்தா: ரூ. 18
...ி இதழ்: ரூ. 1-50

...டைப்புகள் அனுப்பவும்
...ரும்
...னைத்துத் தொடர்புக்கும்:
... முருகந்தன்,
... , சாமியார்தோட்டம்,
...மந்தூர் சாலை,
...தை,
...ன்னை-600 015.

# உளுத்துப்போன சட்டத்தைக் கொளுத்துவது உரிமை!

இந்தித் திணிப்புக்கு எதிராக கருணாநிதி கட்சி நடத்தும்போராட்டத்தைக் கூட எம்ஜிஆரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அரசியல் சட்டத்தின் 17வது பிரிவாகிய ஆட்சிமொழி பற்றிய சரத்தை எரித்தது சட்ட விரோதம் எனகூறி ஏழு தி.மு.க. எம்எல்ஏக்களின் பதவிகளை பறித்துள்ளது பாசிச எம்ஜி ஆர் அரசு.

"இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருக்கும்" என்பதுதான் நேருவின் வாக்குறுதி. இதைத்தான் சட்டமாக்கக் கோருகிறார் கருணாநிதி. இதில் எம்ஜிஆருக்கும் உடன்பாடு உண்டு. இந்த வாக்குறுதிப்படியேகூட இந்தி ஆட்சி மொழியாக ஏற்கப்படுகிறது என்பது தான் உண்மை.

எம்.ஜி.ஆர், கட்சிப் பொதுக் குழுவிலே அரசியல் சட்டதிருத்தம்கொண்டு வரவேண்டும் என்று தீர்மானம்கூட போட்டார். பிறகு ராஜீவுக்கு பயந்து கொண்டு ஒரு குட்டிக்கரணம் போட்டார் எம்ஜிஆர். 'ராஜீவின் வாக்குறுதி போதும்; சட்டத் திருத்தம் தேவையில்லை' என்று நிருபர்களிடம் கூறினார். இந்தி எதிர்ப்பு போராட்டம் வலுப்பதைக் கண்டு அதற்கும் ஒரு குட்டிக்கரணம் போட்டார் எம்ஜிஆர். சட்ட திருத்தத்தைக் கோரும் தீர்மானத்தை தி.மு.க.வின் ஆதரவோடு சட்டசபையில் நிறைவேற்றினார்.

இத் தீர்மானத்தை அமுலாக்க வேண்டும் என்பதற்காகத்தான் 'அறவழியில் அண்ணா வழியில்(!)' சட்ட எரிப்பு போராட்டம் நடத்துகிறது கருணாநிதி கட்சி. சட்டபூர்வமான முறையில் முன் அனுமதி பெற்றுத்தான் இப் போராட்டம் நடக்கிறது. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பழி தீர்த்துக் கொள்ளும் வகையில் வக்கிரத்தோடு பாயும் எம்ஜிஆர் இந்த வாய்ப்பையும் தவறவிடவில்லை. ஏழு திமுக எம்எல்ஏக்களின் பதவியைப் பறித்து தன் வெறியை தீர்த்துக்கொண்டார். அரசியல் சட்டம் என்பது மாறுதலுக்கு அப்பாற்பட்டதோ, புனிதமானதோ அல்ல. சட்டப்படியேகூட சட்ட எரிப்பு ஒரு குற்றமென்று அதில் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. அரசியல் சட்டத்தை எரிப்பது என்பது அதை எதிர்ப்பதற்கும், மாற்றுவதற்கும் ஜனநாயக உரிமை உண்டு என்பதை நிரூபிக்கும் ஒரு வடிவம். இந்த உரிமையை மறுப்பது என்பது எம்ஜிஆர் ஆட்சியின் அம்மணமான அடக்குமுறையைத்தான் குறிக்கிறது.

எம்ஜிஆர் ஏற்றிப்போற்றும் அண்ணாதுரையே சட்ட எரிப்பு போராட்டம் நடத்தியிருக்கிறார். நெடுஞ்செழியனும், பி.எச். பாண்டியனும். "அண்ணா துரை சட்ட எரிப்பு செய்தபோது எம்.எல்.ஏ; எம்.பி.; மந்திரி பொறுப்பில் இல்லை. மேலும் அதன்பிறகு கொண்டுவந்த சட்டப்படிதான் தி. மு. க காரர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்" என்று புளுகினார்கள்.

அண்ணாதுரை சட்டத்தை எரித்தபோது மாநிலங்களவையில் எம்.பி.யாக இருந்தார். அதன்பிறகு வந்த சட்டம்கூட தேசீய ஒருமைப்பாடு பற்றியதுதானே தவிர, சட்ட எரிப்பு போன்ற அவமதிப்பு பற்றியது அல்ல.

உண்மையில், எம்ஜிஆரிடம் விஞ்சி நிற்பது பாசிச ராஜீவிடமிருந்து தன் ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். இதனால்தான், தான் கொண்ட லட்சியத்தை அமுலாக்க கோரும் கருணாநிதியின் போராட்டத்தைக்கூட சிதறடிக்கிறார்.

இதே வழிமுறையைப் பின்பற்றியவர்தான் கருணாநிதியும். கருணாநிதி ஆட்சியில் இருந்தபோது இந்தித் திணிப்பை கண்டு கொள்ளாமலும், ஜனநாயக விரோதியாகவும் இருந்தற்கான சான்றுகள் ஏராளமாக உண்டு.

இந்தித் திரைப்படங்களைத் திரையிட வேண்டாம் என்று இன்று கோரும் கருணாநிதி, அன்று திரையிட அரசு சார்பில் பாதுகாப்பு கொடுத்தார். 1970-ல் நாடாளுமன்றத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் விவாதத்துக்கு வந்தபோது 25 கருணாநிதி கட்சி உறுப்பினர்களில் 15 பேர் காணாமல் போய் விட்டார்கள்.

கருணாநிதியின் ஆட்சியில்அவரது எம்எல்ஏக்களின் மேல் லஞ்சப்புகார் கொடுக்க ஊர்வலம் போனார் எம்ஜிஆர். இதற்கு எதிராக திருப்பூர் எம்எல்ஏ துரைசாமியை விட்டு எம்ஜிஆரின் மீது பொய் வழக்கு போட்டு ஆண்டுக் கணக்கில் இழுத்தடித்தவர் கருணாநிதி. எம்ஜிஆர் மருத்துவமனையில் கிடந்தபோது அவர் "உயிருள்ள பிணம்"என்று செயற்கையான புகைப் படங்கள் தயாரித்து கேவலமான முறையில் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

எம்ஜிஆரோ, கருணாநிதி இந்திராவுக்கு கருப்புக்கொடி காட்டியதற்காக, இந்திராவே இறந்துபோன பிறகு, இந்திராவை கருணாநிதி கொல்ல முயன்றதாக வழக்கு போட்டு இழுத்தடிக்கிறார்.

கருணாநிதி—எம்ஜிஆர் இருவருக்குமே கொள்கை, கோட்பாடு என்று எதுவும் கிடையாது. அரசியல் பிழைப்புவாதம் கருதி ஆட்சியைப் பிடிப்பதற்காக இவர்கள் நடத்தும் கொச்சையான போட்டி, உண்மையில், மொழித் திணிப்புக்கு எதிராகவும் ஜனநாயகத்திற்கு எதிராகவும் போராடும் சக்திகளை ஒடுக்குவதற்கான முன்னுதாரணங்களையும், கறுப்பு சட்டங்களையும் தான் கொண்டு வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

முன்பு எப்போதும் இல்லாத இந்தித் திணிப்புக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு அப்பட்டமாகவே ஒரு கூலிப் பிரச்சாரப்படை தலை தூக்கியிருக்கிறது.

வானொளி, வானொலி மற்றும் பிற மத்திய அரசு பிரச்சார சாதனங்கள் மூலமாகவும், உத்தரவுகள்மூலமும் இந்தித் திணிப்பு அதிகரித்து வருகிறது.

"வழக்கமாக விடப்படும் ஒரு சாதாரண சுற்றறிக்கைதான் அனுப்பினோம். அதுவே காலாவதி ஆகிப் போகும். இந்தியை திணிக்க மாட்டோம்" என்று பாசிச ராஜீவ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மற்றொரு இந்தித் திணிப்பு சுற்றறிக்கைவெளிநாடுகளிலுள்ள இந்திய தூதரகங்களுக்குப் போகிறது.

இந்த நிலைமைகளில் வெறும் வாக்குறுதிகளும், தீர்மானங்களும் போதாது. அது அரசியல்சட்டத்தில் ஏற்றப்பட்டாலும் பிரச்சினையை தீர்க்காது. இந்தியாவிலுள்ள அனைத்துத் தேசிய இனமொழிகளும் ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டும்.

எம்ஜிஆர் எடுத்திருக்கும் நடவடிகைக் கருணாநிதியின் கட்சியுடனான போட்டி, தனிப்பட்ட குரோதம் காரணமாக மட்டும் எடுக்கப்பட்டது இல்லை. அரசியல் சட்டத்தை ஏற்காது அச்சட்டத்தை நிராகரிக்கவும், மாற்றவும், சட்ட எரிப்பு போராட்டம் நடத்துவதற்கு மக்களுக்கு உள்ள ஜனநாயக உரிமையை மறுப்பதாகும்.

கருணாநிதியும் இனி மற்றவர்கள் கொளுத்த இருக்கும் வாசகங்களையும் 'ஆபத்தில்லாமல்' மாற்றி அமைத்து விட்டார். தன்னுடைய கட்சி ஒரு பிழைப்புவாதக் கட்சி என்பதை மீண்டும் ஒருமுறை நிருபித்து விட்டார். இதனால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று கருத முடியாது.

மக்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள அடக்குமுறை என்ற முறையில் இதை எதிர்ப்போம். கருணாநிதி—எம்ஜியாரின் காரியவாத அரசியலை அம்பலப்படுத்துவோம்! ○

## அறிவிப்பு

நவம்பர் '86 புதிய கலாச்சாரம் இதழில் இந்திய மக்கள் முன்னணியை அம்பலப்படுத்தும் கட்டுரையில் ஒரு பிழை திருத்தம், பக்கம் 11இல் முதல் வரிசையில் 'நவம்பர் புரட்சியின் வரவால்' என்று துவங்கும் பத்தி அந்தக் கட்டுரைக்கு தொடர்புடையது அல்ல. தவறுதலாக அங்கே இடம் பெற்று விட்டது. கவனக் குறைவால் ஏற்பட்ட இந்தப் பிழைக்கு வருந்துகிறோம்.

## தொலைபேசி ஊழியர் மாநாடு
## துரோகத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு!

நகரமெங்கும் தோரணங்கள், பல வண்ண சுவரொட்டிகள், சினிமா நடிகனுக்கு வைக்கப்படுவதுபோல சங்கத் தலைவர் குப்தாவுக்கு கட்—அவுட், தலைவர் சோடா குடித்தது முதல் தொண்டர்களின் சாப்பாட்டுப் பந்தி வரை வீடியோ படப் பிடிப்பு (சோசலிசமா சும்மாவா), அறுசுவை உணவு என்று 'கோலாகலமாக' மாநாடு நடைபெற்றது.

இத்தனை செலவுக்குப் பணம்? வாண்டையார் முதல் சாராயக் கம்பெனி முதலாளி வரை மலர் விளம்பரம் என்ற பெயரில் ஒரு ஆள் விடாமல் வசூலித்து தள்ளிவிட்டார்கள். வசூலிக்கும் தொகையில் வசூலிப்பவருக்கு 10 சதவீதம் ஊக்க போனஸ் என்பதால் முன்னணியாளர்களின் வர்க்க உணர்வு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. வசூலில் முந்தைய சாதனைகளையெல்லாம் முறியடித்து விட்டார்கள்.

நான்குநாள் மாநாடும் ஒருவரையொருவர் தூக்கிப் பிடிப்பதிலும் முதுகு சொறிவதிலும் கழிந்தது. விவாதங்களைக் குறிப்பெடுப்பதற்காக பிரதிநிதிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கையேடுகளில் குறித்துக் கொள்ள பாயிண்ட் (விஷயம்) எதுவும் இல்லாததால் சிலர் அதில் ரம்மி (சீட்டாட்ட) பாயிண்ட் குறித்துக் கொண்டனர்.

மாநாட்டில் கம்யூனிஸ்டு'வர்க்க' உணர்வை எப்படியாவது காட்டியாக வேண்டுமென்பதால், வலது 'கம்யூனிஸ்டு' தலைவர் காத்த முத்துவைக் கொண்டுவந்து அவர் கையில் நிலமீட்சி போராட்ட நிதி என்று ரூ. 1001ஐக் கொடுத்தனர். அதைப் பெற்றுக்கொண்டு மூப்பனாருக்கு 'எதிரான' தங்கள் போராட்டத்தைப் பற்றி நிமிடத்தில் சுருக்கமாக (விரிவாகப் பேசினால் குட்டு அம்பலமாகியிருக்கும்) விளக்கினார். அவர் ஏறிநின்று பேசிய மேடையை அமைக்க வாண்டையாரும் பணம் கொடுத்திருக்கிறார் என்ற விஷயம் காத்த முத்துவுக்குத் தெரியாதா என்ன?

'நாட்டியக் குதிரை நாட்டியக் குதிரை' என்று கத்தியவாறு சிறுவர்கள் வேடிக்கை பார்க்க ஓடினர். ஏதோ பெரிய இடத்து கல்யாண ஊர்வலம் போகிறது போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டோம். 'கடைவீதி கலகலக்கும் என் அக்கா மகள் நடத்து வந்தா' என்ற பாண்டு வாத்திய சத்தம் கேட்கவே நெருங்கினோம்.

பாண்டு வாத்தியக் கோஷ்டிக்குப் பின்னால் 'அக்கா மகள்' யாரையும் காணோம். செஞ்சட்டை வீரர்கள் அணிவகுத்து வந்து கொண்டிருந்தனர். 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று தொண்டை கிழிய அவர்கள் போட்ட கோஷத்தை பாண்டு வாத்தியமும் அதிர்வேட்டுகளும் விழுங்கிவிட்டன.

நவம்பர் 4 முதல் 7 தேதிவரை தஞ்சையில் நடைபெற்ற தொலைபேசி ஊழியர் சங்கத்தின் (NFPTE) தமிழ் மாநில மாநாட்டு ஊர்வலம் தான் இந்த லட்சணத்தில் நடந்து கொண்டிருந்தது. வலது, இடது போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் உள்ள இந்த சங்கத்தின் மாநாட்டு நிகழ்ச்சிகள் அந்தக் கட்சிகளின் அரசியல் அலித்தனத்தையும் துரோகத்தையும் பறைசாற்றியது மட்டுமல்ல; இவர்களின் ஊதாரித்தனம், பணத் திமிர், ஆடம்பர மோகம் ஆகிய அனைத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. மற்ற சாதாரண உழைக்கும் மக்கள் தொலைபேசி ஊழியர்கள் மீது வெறுப்படைவதற்கு இந்த மாநாடு 'பேருதவி' புரிந்தது. எளிமை, போர்க்குணம், தியாகம் ஆகிய உன்னதமான தொழிலாளி வர்க்கப் பண்புகளைத் தவிர மற்ற அனைத்தும் மாநாட்டில் இருந்தது.

நாட்டியக் குதிரைக்கு ரூ. 900; வீடியோவுக்கு ரூ. 3500; வாண வேடிக்கைக்கு ரூ.2500;—விவசாயிகளுக்குரூ. 1001.எப்படி இருக்கிறது வர்க்க உணர்வு! நிதி வசூலித்த முறையைப் போலத்தானே செலவு செய்யும் முறையும் இருக்க முடியும்?

இது புரியாமல் யாரோ ஒரு அப்பாவி கட்சிக்காரர் 'இப்படியெல்லாம் ஆடம்பரம் தேவை தானா' என்று கேட்டிருக்கிறார். "உங்களுக்குப் புரியாது தோழர். இதையெல்லாம்தான் மத்தியதர வர்க்கம் விரும்புகிறது" என்று 'சித்தாந்த' விளக்கம் கொடுத்து அவரை அடக்கிவிட்டனர் தலைவர்கள்.

கம்ப்யூட்டர் மயமாக்குதல், வேலை நிறுத்தச் தடைச் சட்டம் (ESMA), ஆட்குறைப்பு, தினக் கூலி தொழிலாளருக்கு வேலை உத்திரவாதமின்மை, சம்பளக் கமிஷன் பித்தலாட்டங்கள்—என்று தொலைபேசித் துறையில் ஏராளமான பிரச்சனைகள். இதற்கெல்லாம் மாநாடு என்ன முடிவெடுத்தது என்று கேட்கிறீர்களா?

இப்படிக் கேட்பவர்களின் குரலை அமுக்கத்தான் அதிர்வேட்டும், வாணவேடிக்கையும், பாண்டு வாத்தியமும்!

—ம க இ க, தஞ்சைக்கிளை.



படிப்பகம்

www.padippakam.com

# சூளைமேடு துப்பாக்கிச் சூடு
# ஈழப்போராளிகள் கைது — ஆயுதப் பறிப்பு
# போதை மருந்து கடத்தல் — போலீஸ் கூட்டு

சூளைமேட்டில் தங்கியிருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் (EPRLF) சேர்ந்த போராளிகள் குடிகாரர்கள். கெட்ட நடத்தையுள்ளவர்கள்' என்று எல்லாப் பத்திரிக்கைகளும் எழுதி விட்டன. உண்மையாக நடந்ததை அம்பலப்படுத்திய ஒரே பத்திரிக்கை 'புதிய ஜனநாயகம்' மட்டும்தான். "இதுதான் சந்தர்ப்பம்; இவர்களைத் தமிழகத்தைவிட்டு வெளியேற்றிவிட வேண்டும்" என்று பல முதலாளித்துவப் பத்திரிகைகளும் குரலெழுப்பின.

'டெலோ' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் திருச்சி கொட்டப்பட்டு அகதி முகாமிலிருந்து இரண்டு ஈழத் தமிழ் அகதிகளைக் கடத்திச் சென்று மாதங்கள் பல ஆகின்றன. அவர்களின் கதி என்ன என்பதைப் பற்றி இன்று வரை தகவல் இல்லை. ஆனால் அதே அகதி முகாமைச் சேர்ந்த பிற அகதிகள் இது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிய போது அவர்கள் தமிழக போலீசாலேயே மிரட்டப்பட்டனர்.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரணியத்திலும் பிற இடங்களிலும் பிளாட், டி.இ.ஏ போன்ற அமைப்புகள் தமிழக மக்கள்மீது நடத்திய தாக்குதல்கள் எவ்வித விசாரணையுமின்றி மறைக்கப்பட்டன. 30 பேரின் மரணத்திற்கு காரணமாக இருந்த மீனம்பாக்கம் விமான நிலைய குண்டுவெடிப்பு சம்பவமும் அமுக்கப்பட்டது.

ஆனால் தீபாவளியன்று

சென்னை சூளைமேட்டில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் அரசாலும் அரசின் ஊது குழல்களான பத்திரிக்கைகளாலும் வெகுவாகப் பெரிதுபடுத்தி விளம்பரப்படுத்தப் பட்டன. இதன் உள்நோக்கத்தையும் பின்னணியையும் இக்கட்டுரை அம்பலப்படுத்துகிறது.

### துவக்கம் சூளைமேட்டில் அல்ல!

1-11-86 அன்று சூளைமேட்டில் நடைபெற்ற சம்பவம் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னால் அதற்கு சரியாக ஒரு மாதம் முன்பு அதே பகுதியில் நடைபெற்ற சில சம்பவங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சென்னை, மேத்தா நகர், பாரதி தெருவில் 18ஆம் இலக்க வீட்டில் குடியிருந்த முருகதாஸ் இத்தகைய போதை மருந்து கடத்தல் பேர்வழி. ஈழத்தமிழ் அகதி.

29-9-86 அன்று மாலை முருகதாஸின் வீட்டில் அவனுடைய ஆட்கள் சிலர் வீடியோவில் ப்ளூஃபிலிம் (ஆபாசத் திரைப்படம்) பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சற்றும் எதிர்பாராத நேரத்தில் வீட்டினுள் நுழைந்த மேற்சொன்ன உள்ளூர் இளைஞர்கள் அவர்கள் இருந்த நிலையைப் பார்த்ததும் ஆத்திரம் கொண்டனர்.

"ஏண்டா ஈழத்துல அவனவன்



## சதியின் முடிச்சுக்கள் அவிழ்கின்றன!

சூளைமேடு, திருவள்ளுவர் புரம் பகுதியில் தங்கியிருந்த ஈ.பி.ஆர்.எல் எஃப் ஐச்சேர்ந்தஈழப்போராளிகளுடன் நெருக்கமான உறவு வைத்திருந்தனர், அந்தப் பகுதி இளைஞர்கள். ஜூலை '83 படுகொலைக்குப்பின் இந்தியாவில் தஞ்சம் புகுந்த ஈழ அகதிகளில் சிலர் சென்னையில் சுகபோகமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தது அந்த உள்ளூர் இளைஞர்களுக்கு உறுத்தலாக இருந்திருக்கிறது

உயிரைப் பணயம்வச்சு போராடிக்கிட்டிருக்கிறான். நீங்க என்னா திமிரு இருந்தா இப்படி ப்ளூஃபிலிம் பாத்துகிட்டிருப்பீங்க" என்று கேட்டனர். உடனே முருகதாஸின் ஆட்களான ஈழத்துப் பேர்வழிகள் "நீங்க யார்டா அதைக் கேட்க" என்று இளைஞர்களைத் திருப்பிக் கேட்டிருக்கின்றனர்.

"நீங்க தின்னு கொழுத்துக் கிடக்குறீங்க.எங்களுக்குத் தெரிந்து

"இந்திய அரசுடனான தேன் நிலவு முடிந்து விட்டது. 1983 ஜூலைக்குப்பின் ஈழ விடுதலைப் போராட்டம் இப்போது ஒரு புதிய கட்டத்தில் நுழைகிறது" என்றார் ஒரு ஈழப் போராளி. தேன் நிலவு இனிமையாக முடியவில்லை. தனது திட்டத்திற்குப் பணியாத ஈழப் போராளிகள் பலமுனைகளிலிருந்தும் மத்திய மாநில அரசுகளால் துன்புறுத்தப்பட்டனர்.

தமிழக மக்களின் ஆதரவில்லாமல் போராளிகளைத் தனிமைப்படுத்துவதற்காக அரசின் பிரச்சார எந்திரங்கள் முடுக்கி விடப்பட்டன. போராளிகள் பற்றி பொய்யையும், அவதூறையும் பரப்புவதற்காக தனியார் மக்கள் தொடர்பு நிறுவனம் ஒன்று ரகசியமாகவாடகைக்கு அமர்த்தப்பட்டது என்று 'தி வீக்' என்ற ஆங்கிலவார ஏடு கூறுகிறது.

சூளைமேடு துப்பாக்கிச் சூடு சம்பவத்தைத் தூண்டியது ஒரு போதை மருந்து கடத்தும் கும்பல். அந்தக் கும்பலுக்குத் தமிழக போலீசின் முழு ஆதரவு தரப்படுகிறது. இந்தச் செய்திகளை பிற பத்திரிக்கைகள் தெரிந்தே மறைக்கின்றன. இருட்டில் ஒளிக்கப்பட்ட பல உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறதுஇந்தக் கட்டுரை.

படிப்பகம்

www.padippakam.com

ஈ.பி.ஆர்.எல்.எஃப் காரங்க கஷ்டப்படுறாங்க. அவங்களுக்கு உதவி செஞ்சா என்ன?'' என்று கேட்டனர் இளைஞர்கள்.

உடனே முருகதாஸின் ஆட்கள் அந்த உள்ளூர் இளைஞர்களிடம் "போங்கடா வேசி மகன்களா. ஈ.பி.ஆர்.எல்.எஃப் காரனெல்லாம் வேசிமகன்தாண்டா, ஊரக் கொள்ளயடிச்சு தின்னுகிட்டு திரியறானுங்க. எவண்டா சண்டை போடுறான்? நாங்க எல்.டி.டி.இ (பிரபாகரனின் அமைப்பு) தவிர வேறு யாருக்கும் காசு தரமாட்டோம். என்னடா செய்வீங்க'' என்று கேட்டிருக்கின்றனர். ஆத்திரமடைந்த இளைஞர்கள் அவர்களை அடித்திருக்கின்றனர்.

உடனே துப்பாக்கியை எடுக்க வீட்டின் உள்ளே ஓடினர் முருகதாஸின் ஆட்கள். இளைஞர்கள் வெளியே ஓடி வந்து வீட்டுக்கதவை வெளிப்புறம் தாழ்போட்டுவிட்டு தெருவில் இருந்த மக்களிடம் முருகதாஸ் கும்பலின் போதை மருந்து கடத்தல் விவகாரத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றனர். கூட்டம் கூடிவிடவே சத்தம் போடாமல் அடங்கிவிட்டனர் முருகதாஸின் ஆட்கள்.

சூளைமேட்டில் தங்கியிருந்த ஈ.பி. ஆர்.எல்.எஃப் போராளிகள் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு விசாரிப்பதற்காக மறுநாள் முருகதாஸின் வீட்டுக்குச் சென்றனர். விவகாரம் கைகலப்பில் முடிந்தது. முருகதாஸின் வீட்டிலிருந்து சில பொருட்களையும் 5000 ரூபாய் பணத்தையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் போராளிகள் எடுத்து வந்து விட்டனர் என்றும் நம்பகமான சிலர் கூறுகின்றனர்.

**ஈ.பி.ஆர்.எல்.எ:ப்-இன் விளக்கம்**

இது குறித்து விசாரிக்க அவர்களது அலுவலகமான ஈழ மக்கள் செய்தி நிலையம் (EPIC) சென்றோம். அவர்களது செயலர் நாயகமான பத்மநாபாவையோ, கேதீஸ்வரனையோ சந்திக்க இயலவில்லை. மேற்கொண்டு நடந்தவற்றை ஈ.பி. ஆர்.எல்.எஃப்அமைப்பைச் சேர்ந்த கிருபா என்பவர் விளக்கினார்.

"பத்திரிக்கைகளில் சொல்லப்பட்டதைப்போல எங்கள் தோழர்கள் முருகதாஸ் வீட்டிலிருந்து எந்தப் பொருளையும் எடுத்து வரவில்லை, ஆனால் 30-9-86 அன்றே ரகசியப் புலனாய்வுத்துறை ('கியூ' பிரிவு)யைச் சேர்ந்த போலீஸ் சூப்பிரெண்டு திரு. ராமானுஜத்தை சந்தித்து நடந்தவற்றை விளக்கினோம். அவர் போலீஸ் அஸிஸ்டெண்ட் கமிஷனர் திரு. இருதயராஜை சந்திக்கச் சொன்னார். சந்தித்தோம். பிறகு அவர் சொன்னதன் பேரில் 1-10-86 காலை அண்ணா நகர் காவல் நிலையத்தில் முருகதாஸ் பற்றி புகார் கொடுத்தோம்.''

"2-10-86 காலை இரண்டு போலீஸ்காரர்களுடன் முருகதாஸ் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார். 'நாங்க போதை மருந்துதாண்டா கடத்துறோம். அப்படித்தாண்டா கடத்துவோம். உங்களால்என்னடா செய்ய முடியும்' என்று அடாவடித்தனமாகக் கேட்டார். உடனே அவருடன் வந்திருந்த போலீஸ்காரர்களிடம் 'நீங்கள் மட்டும் இவர்களுடன் வரவில்லையென்றால் நடப்பதே வேறு' என்று எச்சரித்தோம். பிறகு அவர்கள் போய் விட்டனர்.

"ஆனால் அன்றைக்கே மதியம் இரண்டு மணிக்கு அமிஞ்சிக்கரை இன்ஸ்பெக்டர் பகவதி 6 போலீஸ்காரர்களுடன் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார். அவர்கள் எங்களை மரியாதையின்றி கிரிமினல் குற்றவாளிகளைப் போல நடத்தினர். பிறகு மாலை 5 மணிக்கு அஸிஸ்டென்ட் கமிஷனர் வேணுகோபாலை வந்து பார்க்கும்படி சொல்லிவிட்டு அவர்கள் போய்விட்டனர்.''

"1-10-86 காலையில்கொடுத்த எங்கள் புகாருக்கு மதிப்பில்லை. ஆனால் அன்று இரவு முருகதாஸ் என்ற கடத்தல்காரன் கொடுத்த புகாரின் பேரில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. இருந்தும் மாலையில் அஸிஸ்டென்ட் கமிஷனரைப் பார்க்கப் போனேன்.''

"ஏற்கனவே அங்கே போயிருந்ததால் பழக்கம் காரணமாக அவருக்கு எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தேன். ஆனால் அவர் என்னை நாற்காலியைவிட்டு எழுந்து வெளியே போகச் சொன்னார்.''

"பிறகு அவர் கூப்பிட்டபின் உள்ளே போனேன். இந்தப் பிரச்சினையில் சமாதானமாகப் போகும்படி சொன்னார். அதையே எழுதிக் கொடுக்கச் சொன்னார். எழுதிக் கொடுத்துவிட்டு வந்தோம்.''

போலீசின் இந்தப் போக்கைக் கண்டித்து ஈழ மக்கள் செய்திநிலையத்தை ஒரு மாதகாலம் மூடிவிடுவதாக ஈ. பி. ஆர். எல். எஃப் அறிவித்தது. ஆனால், பிரபாகரனின் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் முருகதாஸின் சார்பில் சென்று மிரட்டிய காரணத்தினால்தான் அலுவலகத்தை மூடியிருக்கின்றனர் என்றும் போராளி இயக்கங்களுடன் தொடர்புள்ள சிலர் கூறுகின்றனர்.



இலங்கையில் உயிருக்கு உத்தரவாதமில்லை; இந்தியாவில் வாழ்வுக்கு உத்தரவாதமில்லை! தமிழ் அகதிகள் : இருதலைக் கொள்ளி எறும்புகள்.

**போதை மருந்துக் கடத்தல் மாபெரும் வலைப் பின்னல்**

முருகதாஸ் விவகாரத்தை விசாரிக்கப் புகுந்ததில் போதை மருந்து கடத்தல் பற்றிய பல தகவல்கள் கிடைத்துள்ளன. "பெரும்பான்மையான போதைப் பொருட்கள் கொழும்பிலிருந்து இந்தியா வழியாக கராச்சிக்கும் அங்கிருந்து மேலை நாடுகளுக்கும் கடத்தப்படுகின்றன'' என்றார் கிருபா.

"உலகம் முழுவதும் 800க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் போதை மருந்துக் கடத்தலுக்காக பல்வேறு நாடுகளில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்துக்காரர்கள்.

பிரபாகரனின் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரெஞ்சு நாட்டு நிதிப் பொறுப்பாளரும் வேறு சிலரும் போதை மருந்து கடத்திய குற்



படிப்பகம்

www.padippakam.com

றத்திற்காகச் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர். போதை மருந்து கடத்தியே சீரழிந்த ஒரு இயக்கம் ஒன்று உண்டென்றால் அதுதான் பிளாட். தற்போது அதிலிருந்து உடைந்து பிரிந்துள்ள ஈசுவரன் குழுவினரும் இந்த வேலையில் ஈடுபடுகின்றனர்'' என்று போராளிகள் இயக்கம் சார்ந்தவர்களும், ஈழத்தமிழ் அகதிகளும் குறிப்பிடுகின்றனர்.

சென்னை அண்ணா நகர் பகுதி போதை மருந்து கடத்துபவர்களின் சொர்க்கமாகத் திகழ்கிறது. இதே அண்ணா நகரில்தங்கியிருந்த 'பிளாட்' இயக்கத்தினர் குடி கூத்துகளில் ஈடுபட்டதாக 'புதியகலாச்சாரம்' அக் '85இதழில் வெளியிட்ட செய்திக்கு 'பிளாட்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அப்போது ஆட்சேபம் தெரிவித்தனர்;



ஆயுதப் பயிற்சி அவசியம்தான். ஆனால் அரசியல் பயிற்சியின் அவசியம் மறுக்கப்படும்போது...?

மிரட்டவும் முயன்றனர். ஆனால் உண்மை இன்றைக்கு வீதிக்கு வந்து விட்டது.

மேத்தா நகரில் தங்கியிருந்த முருகதாஸும் அவருடைய கூட்டாளியான மரிய பிரான்சிஸும் போதை மருந்து கடத்துவதில் கூட்டாளிகள். அண்ணா நகரில் இருக்கும் தீபக் வீடியோ சென்டர் இவர்களது வர்த்தகப் பரிவர்த்தனைக்கான மையமாக இருக்கிறது. அங்கே உள்ள தூள்பாலு, சுந்தரி என்றழைக்கப்படும் சுந்தரலிங்கம் ஆகியோர் போதை மருந்துகள், கடத்தல்பொருட்கள், ப்ளுபிலிம்கள் ஆகிய அனைத்து வியாபாரங்களிலும் தொடர்புள்ளவர்கள் என்கிறார்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்த பல்வேறு தரப்பு மக்கள். ஆனால் அந்தக் கும்பலின் பண பலம், முருகதாஸின்அடியாள்பலம், போலீசுடன் இவர்களுக்குள்ள நெருக்கம் ஆகியவை காரணமாக நமக்குத் தகவல் தந்தவர்கள் யாரும் தங்கள் பெயரை வெளியிட விரும்பவில்லை.

பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த போராளிகளிடம் இது பற்றிக் கேட்டோம். "இது ஒரு வெட்கக் கேடான உண்மை. ஆயுதங்களுக்காகவும், நிதி நெருக்கடியை சமாளிக்கவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சில இயக்கத்தினர் இத்தொழிலில் சம்பந்தப்பட்டுள்ளனர்'' என்கின்றனர்.

## அகதிகளும் அதிகாரிகளும் கூட்டு!

"ஆனால் இது ஒரு மாபெரும் வலைப் பின்னல். ராபின் மெய்ன் போன்ற நபர்கள், அரசியல் பிரமுகர்கள், போலீஸ் ஆகிய அனைவரும் இதில் கூட்டாக இருக்கின்றனர். இவர்களது பண பலம், ஆயுத பலம், அதிகார பலம் எங்களைவிட அதிகமானது. இவர்களை எதிர்க்கும் சக்தி எங்களுக்கு இல்லை'' என்று அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்.'

ராபின் மெய்ன்மீது வங்கி மோசடி குற்றத்திற்காக இன்னமும் ஏன் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்பது இப்போது புரிந்தது.

விடுதலை இயக்கங்கள் இல்லாமல் தனியாக சில ஈழத் தமிழ் அகதிகள் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கடத்தும் ஹெராயின் என்ற போதைப் பொருள்தான் விலைமிக அதிகமானதும், அபாயகரமானதுமாகும். கடத்தலைத் தொழிலாக வைத்திருக்கும் அகதிகள் பலர் விடுதலை இயக்கங்களுக்கு 'நன்கொடை' தருகின்றனர். 'தன்னைத் தவிர வேறு யாருக்கும் இந்த 'நன்கொடை'யைத் தரக்கூடாது' என்றும், 'அப்போதுதான் தொழில் செய்ய அனுமதிப்போம்' என்றும் ஒரு விதி முறையையே விடுதலைப் புலிகள் (LTTE) உருவாக்கி வைத்திருப்பதாகப் பல ஈழ அகதிகள் கூறுகின்றனர்.

ஆப்கானிஸ்தான், பாலஸ்தீனம் போன்று உலகெங்கும் பல நாடுகளில் அகதிகள் பிரச்சினை விசுவரூபமெடுத்துள்ளது. எல்லா நாடுகளையும் சேர்ந்த இந்த அகதிகளில் ஒரு பிரிவினர் போதை மருந்து கடத்தலை ஒரு தொழிலாகவே மேற்கொண்டுவிட்டனர்.

இத்தனை கேடு கெட்ட சமூக விரோதக் கும்பலைத் தெரிந்திருந்தும், பகிரங்கமாக அதைஅறிவித்து விட்டால் போராளி இயக்கங்களுக்கிடையே உள்ள ஒற்றுமை குலைந்து விடும் என்று இவர்கள் அஞ்சுவதுதான் வேடிக்கையாயிருக்கிறது. சமூக விரோதச் செயலை அங்கீகரிக்கும் ஒரு இயக்கம் என்ன விடுதலையை சாதிக்கப் போகிறது. அப்படியே இத்தகைய இயக்கங்கள் விடுதலையை வென்றாலும் 'விடுதலையான' ஈழம் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே வேதனையாய் இருக்கிறது.

'ஈரோஸ்' இயக்கத் தலைவர் பாலகுமாரனும், இ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தைச் சேர்ந்த கிருபாவும் தங்கள் இயக்கங்களுக்கும் போதை மருந்துக் கடத்தலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று திட்டவட்டமாக மறுத்தனர்.

போதை மருந்து கடத்தல்காரன் முருகதாஸுடன் மோதல் ஏற்பட்டவுடன் புகார் கொடுக்க அண்ணா நகர் போலீஸ் நிலையத்தைஅணுகுவதற்குப்பதில் 'கியூ' பிரிவு ரகசிய போலீஸ் அதிகாரியை ஈ.பி.ஆர்.எல்.எஃப் காரர்கள் அணுகியிருக்கிறார்கள். கியூ பிரிவு ரகசிய போலீஸ்துறை, தமிழக நக்சல்பாரி புரட்சியாளர்களை ஒடுக்குவதற்காகவே சிறப்பாகத் தோற்றுவிக்கப்பட்ட போலீஸ் படை. போராளிகள் தங்கள் பிரச்சினைகளுக்கு முதன் முதலில் அணுகுவது 'கியூ'பிரிவுபோலீசைத் தான் என்றால் அவர்கள் நிலைமை உண்மையிலேயே அவலமானதுதான். மிகமோசமான அளவுக்குஇந்தியஉளவுத் துறையிடம் தங்களை ஒப்புக் கொடுத்து விட்டிருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது.

ஆனால் இத்தனைக்கும் அவர்களுக்குக் கிடைத்த பரிசு போலீசிடம் அவமானப்பட்டதுதான்.

முருகதாஸ் விவகாரத்தில் விட்டது சனியன் என்று போராளிகள் வேண்டுமானால்ஒதுங்கியிருக்கலாம். ஆனால் போதை மருந்துக் கும்பலும், போலீசும் விடுவதாக இல்லை. அவர்களிடம் கருக்

படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்த ஆத்திரம் சரியாக ஒரு மாதத்தில் வெளிப்பட்டது.

**சூளைமேடு சம்பவம்—வலையில் விழுந்தனர் போராளிகள்!**

1-11-86 அன்று சென்னை சூளைமேடு பகுதியில் ஈ.பி ஆர்.எல்.எஃப் போராளிகள் துப்பாக்கியால் சுட்டதில் திருநாவுக்கரசு என்ற இளைஞர் மரணமடைந்தார். துப்பாக்கிச் சூடு நடந்ததற்கு மூல காரணம் போராளிகள் அல்ல என்பதை சூளைமேடு பகுதி மக்கள் அனைவருமே சொல்கின்றனர். ஆனால் போராளிகள் எப்படி ஆத்திர மூட்டப்பட்டனர் என்பதைப்பற்றி பலவிதமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. இதற்குக் காரணம், ஆத்திரமூட்டிய நபர்கள் யாரும் உள்ளூர்க்காரர்கள் அல்ல என்பதுதான்.

நாங்கள் விசாரித்ததில் பெரும்பாலானோர் கூறியதையும் நம்பத் தகுந்ததாக இருப்பதையும் தொகுத்துத் தருகிறோம்

1-11-86 காலை ஈபி.ஆர்.எல் எஃபைச் சேர்ந்த 4 போராளிகள் கடையில் ஏதோ பொருட்கள் வாங்கிவிட்டு வீடு செல்ல திரும்பியிருக்கின்றனர். அப்போது திடீரென்று அங்கே வந்த ஆட்டோ ரிக்ஷாவிலிருந்து ஒரு நபர் கீழே இறங்கி போராளி ஒருவரின் மூக்குக் கண்ணாடியைப் பிடுங்கியிருக்கிறான். அவர்கள் ஏன் எதற்கு என்று கேட்பதற்குள் தயாராகக் கொண்டு வந்திருந்த உடைந்த சோடாபாட்டில், கத்தி ஆகியவற்றால் போராளிகள் அனைவரையும் தாக்கியிருக்கிறார்கள். இரண்டு பேர் மிக மோசமாக காயமடைந்தனர். பாக்கி இரண்டு பேரும் வீட்டை நோக்கி ஓடியிருக்கின்றனர். முத்து என்ற ரவுடியின் தலைமையில் அங்கே திரட்டி வைக்கப்பட்டிருந்த கும்பல் அவர்களை கல்லால் அடித்தவாறே விரட்டியது. ஓடிய போராளிகள் கையில் துப்பாக்கியுடன் வீட்டுக்கு வெளியே வந்தனர். துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டனர்.

அவர்கள் துப்பாக்கியால் வானத்தில் சுட்டுக் கொண்டிருந்தாலும் கும்பல் அவர்களைத் தொடர்ந்து தாக்கியது. அவர்கள் தங்கியிருந்த வீட்டின் முன் போடப்பட்டிருந்த கூரை கொளுத்தப்பட்டது. இதற்கிடையில் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்த போராளிகளை கும்பல் வளைத்துக் கொண்டது.

போராளிகளில் ஒருவர் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடன் வெளியே வந்து மேலே பார்த்து சுட்டார். அவர்மீது மோதி, துப்பாக்கியைத் தட்டிவிட்டனர் சிலர். குண்டுஅவர்கையைச் சிரைத்துக் கொண்டுபோய் திருநாவுக்கரசு என்பவர் மீது பாய்ந்தது. தங்களில் ஒருவர் சுடப்பட்டவுடன் இயல்பாகவே காலனி மக்கள் ஆத்திரமடைந்து திரண்டனர். இதனால்பீதியடைந்த போராளிகள் மாடிமேல் ஏறிக் கொண்டு கும்பலைக் கலைப்பதற்காக வானத்தை நோக்கியும், செங்கற்குவியல் ஒன்றை நோக்கியும் சுட்டுக் கொண்டிருந்தனர்.

கலவரம் முற்றத் தொடங்கியவுடனேயே ஆட்டோ ரிக்ஷா அங்கிருந்து மாயமாக மறைந்து விட்டது. அதன்பின்னர்தான் போலீஸ்காரர்கள் சிலர் அங்கே வந்து சேர்ந்தனர்.

அந்த நேரத்தில் வெளியே ஏதோ வேலையாகச் சென்றிருந்த ஈ.பி.ஆர். எல். எஃபின் ராணுவப் பொறுப்பாளர் டக்ளஸ் மோட்டார் சைக்கிளில் வீடுதிரும்பியிருக்கிறார். வீட்டின் முன் ஒரே கூட்டமாயிருப்பதையும் போலீஸ்காரர்கள் நிற்பதையும் பார்த்த அவருக்கு ஒண்ணும் விளங்கவில்லை. நிலைமையைப் புரிந்துகொள்ள முயன்றிருக்கிறார். கைகளை கூப்பியவாறே எல்லோரையும் சமாதானப்படுத்த முயன்றிருக்கிறார்.

போலீசின் முன்னிலையிலேயே அவரைநோக்கிவந்தசெங்கல் ஒன்று அவரது முன் பற்கள் இரண்டையும் உடைத்தெறிந்தது. அவரது மோட்டார் சைக்கிளுக்கு தீ வைக்கப்பட்டது.

கும்பல், வீட்டின் ஒருபகுதியை உடைத்து உள்ளே புகுந்து மண்ணெண்ணையை ஊற்றி அந்த அறைக்கு தீ வைத்தது. கத்தியால் குத்தப்பட்டுகாயமடைந்த ரமணன் என்பவரையும் தூக்கிக் கொண்டு இன்னும் சில போராளிகளும் பாதுகாப்புக்காக பக்கத்து வீட்டு மாடியின் மேல் ஏறிக்கொண்டனர்.

போராளிகள், கும்பலின் தாக்குதலிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்தது. வீட்டினுள்ளே இருந்த ஆயுதங்கள் கும்பலின் கைகளில் சிக்கினாலோ, அல்லது தீவைப்புக்கு உள்ளானாலோ ஏற்படக்கூடிய மோசமான விபரீதத்தைத் தடுக்க வேண்டியிருந்தது. எனவேதான் போராளிகள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டிருக்கின்றனர்.

மொத்தம் 60 ரவுண்டுகள் சுட்டிருக்கின்றனர். அவர்கள் சுடுவதற்குப் பயன்படுத்தியது சப் மெஷின் கன் என்ற தானியங்கி துப்பாக்கி. அந்தப் பகுதியிலேயே ஒருவர் குறிப்பிட்டதுபோல "அவர்கள் சுடணும்னோ காயப்படுத்தணும்னோ நெனச்சு சுட்டிருந்தா ஒரு பய மிஞ்சியிருக்க மாட்டான்" என்பது உண்மைதான்.

ஆனால் தங்கள் உயிரை இழக்க நேரந்தாலும் விடுதலைப் போராளிகள் மக்களுக்கெதிராக ஆயுதத்தை ஏந்தியிருக்கக்கூடாது.

திருநாவுக்கரசைச் சுட்டவர் என்று சொல்லப்படும் சுரேஷ் என்ற போராளியின் இடது கையின் மணிக்கட்டுக்கருகே துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருக்கிறது.

சுரேஷ் சென்னை பொது மருத்துவமனையில் 9வது வார்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார் என்ற செய்தியறிந்து அங்கே சென்றோம். வழக்கமான சுகாதாரமற்ற அரசு மருத்துவமனைவார்டு. அங்கே வெறுமனே தரையில் கிடத்தப்பட்டிருந்தார் சுரேஷ். அருகில் துப்பாக்கியுடன் ஒரு போலீஸ்காரர். அவரை அணுகிப் பேச இயலவில்லை. வார்டில் இருந்த மருத்துவமனைச் சிப்பந்திகளை விசாரித்தோம். அவருடைய நோய் பற்றிய குறிப்புகள் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ரகசியத்தின் நோக்கம் சந்தேகத்தைக் கிளப்புகிறது.

போராளியின் கையில் குண்

**ராஜீவ்—ஜெயவர்த்தனா கூட்டுச்சதியை அம்பலப்படுத்திய மகஇக தோழர்கள் கைது!**

ஈழப் போராளிகள் கைது செய்யப்பட்டதையும், அவர்களுடைய ஆயுதங்கள் பறிக்கப்பட்டதைக் கண்டித்தும், ஈழமக்கள் மீது தன்னுடைய முடிவைத் திணிக்கும் இந்திய அரசை எதிர்த்தும் தஞ்சை மகஇக தோழர்கள் - ராவணன், குரு ஆகியோர் 11-10-86 அன்று இரவு சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர். மறுநாள் காலை சோதனை என்ற பெயரில் அந்தத் தோழர்களின் வீடுகள் சூறையாடப்பட்டன.

இதைக் கண்டித்தும், ஈழப் போராளிகள் மீதான அடக்குமுறையைக் கண்டித்தும் 22-10-86 அன்று தஞ்சையில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

ஈழப் போராளிகளின் மீதான அடக்குமுறையைக் கண்டித்து மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு, தமிழகம் முழுவதும் பிரச்சார இயக்கம் மேற்கொண்டது. அதன் ஒரு பகுதியாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. மக்கள் மத்தியில் பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன.

ஈழப் போராளிகள் மீதான அடக்குமுறையை எதிர்ப்போம்!

ஈழப் போராளிகள் மீது தன் முடிவைத் திணிக்கும் இந்திய அரசை அம்பலப்படுத்துவோம்!

**மக்கள் கலை இலக்கிய கழகம்**
**தமிழ்நாடு**

படிப்பகம்

www.padippakam.com

டடிபட்ட இச் செய்தி தங்களுடைய பொய்ப் பிரச்சாரத்திற்கு இடையூறாக இருக்கும் என்பதால் பத்திரிக்கைகள் இதை மறைத்திருக்கின்றன. பத்திரிக்கைகள் திரித்த இன்னொரு விஷயம் குண்டடிபட்டு இறந்த திருநாவுக்கரசு பற்றிய செய்தி.

திருநாவுக்கரசு அ.தி.மு.க. உறுப்பினரோ, ஆதரவாளரோகூட இல்லை. மாறாக 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இளைஞர் அமைப்பான 'இந்திய ஜனநாயக வாலிபர் முன்னணி'யின் பொதுவான ஆதரவாளர். 'தியாகி திருநாவுக்கரசுக்கு வீரவணக்கம்' என்று இந்திய ஜனநாயக வாலிபர் முன்னணி அந்தப் பகுதியில் பிரசுரம்கூட வெளியிட்டிருக்கிறது. ஆக, செத்தவனெல்லாம் எங்கள் கட்சிக்காரன் என்ற



ஓட்டுச்சீட்டு அரசியல்தான் இங்கேயும் நடந்திருக்கிறது. நாங்கள் விசாரித்ததில், திருநாவுக்கரசுடனும் திருநாவுக்கரசு குடும்பத்துடனும் நெருக்கமாகப் பழகி இருக்கின்றனர் ஈழப் போராளிகள் என்பதும் தெரிய வந்தது.

தினமணியும் வேறுசில பத்திரிக்கைகளும் வேண்டுமென்றே விஷத்தைக் கக்கியிருக்கின்றன. சுடப்பட்டவர் எந்த சாதி என்பதைப்பற்றி ரொம்பவும் அக்கறையுடன் எழுதியிருக்கின்றன. 'திருநாவுக்கரசு ஒரு அரிசன்' என்று மிகுந்த கரிசனத்துடன் எழுதியிருக்கும் தினமணி, அரிசனங்கள் கூண்டோடு கொளுத்தப்பட்டபோதெல்லாம் கொளுத்தப்பட்டவர்கள் என்ன சாதி என்பதை வெளியிட்டதில்லை.

ஆனால் தினமணியின் பிரச்சாரம் வீண்போகவில்லை. ஈழப் போராளிகள் அரசியல் அநாதைகள் என்றும் தாழ்த்தப்பட்டவர்களின் விரோதிகளான அவர்களை உடனே வெளியேற்ற வேண்டும் என்றும் அம்பேத்கார்தாசன் என்பவர் குடியாத்தம் பகுதியில் பிரசுரம் அடித்து வினியோகித்திருக்கிறார்.

"ஈழப் போராளிகள் தமிழக மக்களின் பாதுகாப்புக்கே அபாயகரமானவர்களாகி விட்டார்கள்; அவர்களை முன்னமேயே வெளியேற்றியிருக்க வேண்டும்; ஈழப் போராளிகளை இப்போதாவது கைது செய்திருப்பது வரவேற்கத்தக்கது" என்று தலித்வாய்ஸ் என்ற பத்திரிகையின் ஆசிரியர் வி. டி. ராஜசேகர் ஷெட்டியும், தலித் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த பெருமாள் என்பவரும் அறிக்கை விட்டுள்ளனர்.

ஏறத்தாழ கலவரம் முடியும் நேரத்தில் அந்த இடத்திற்கு வந்த ஈ. பி. ஆர். எல். எஃப். ராணுவப் பொறுப்பாளர் டக்ளஸ் இந்த வழக்கில் பிரதான குற்றவாளியாக்கப்பட்டிருக்கிறார். ஏதோ அவர் தலைமையில் நடத்தப்பட்ட திட்டமிட்ட தாக்குதல் என்பதைப் போல இச்சம்பவம் சித்தரிக்கப்படுகிறது.

இவையனைத்தையும் விட முக்கியமான விஷயம் என்னவென்றால் கலவரத்தைத் தூண்டிய ஆட்டோ ரிக்ஷாவில் வந்த மர்ம மனிதர்களோ, (அவர்கள் முருகதாஸின் ஆட்களாகத்தான் இருக்க வேண்டுமென்று கருதுகிறோம்) அவர்களுக்குத் துணை நின்ற முத்து என்ற ரவுடியோ இதுவரை கைது செய்யப்படவில்லை. முத்து என்ற ரவுடி அந்தப் பேட்டையைச் சேர்ந்தவனே அல்ல என்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள்.

நிலைமை இப்படி இருக்க "உடனடியாக ஈழ அமைப்புகளின் அலுவலகங்கள், முகாம்கள், வீடுகள் அனைத்திலும் சோதனை நடத்தி ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். அவர்களால் தமிழக மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது" என்று எம்ஜிஆர் அரசுக்கு தூபம் போட்டார் வி. பி. சிந்தன்.

ஈழப் போராளிகளின் தன்னிகரற்ற தலைவன் என்று சித்தரிக்கப்படும் பிரபாகரன், ஈ.பி.ஆர்.எல். எஃபை ஒழித்துக்கட்ட இதை ஒரு பொன்னான வாய்ப்பாகப் பயன்படுத்தியிருக்கிறார். 'போராளிகள் என்ற பெயரில் உலவும் சமூக விரோதிகள்' என்று ஈ.பி.ஆர்.எல். எஃப்பை வருணித்திருக்கிறார்.

"அப்படிப் பார்த்தால் சென்னை பாண்டி பஜாரில் பகிரங்கமாக முகுந்தனுடன் துப்பாக்கிச்சண்டையில் ஈடுபட்ட இவரை என்னவென்று சொல்வது" என்று கேட்கின்றனர் பிற போராளிகள்.

**கை ரேகை மட்டும்தான் எடுக்கவில்லை!**

பிரபாகரனின் இந்த அற்ப சந்தோஷம் சில நாட்கள்கூட நீடிக்கவில்லை. 8-11-86 அன்று ஈழப் போராளிகள் அனைவருமே கைது செய்யப்பட்டனர். அவர்களுடைய ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

போலீசார் உங்களை எப்படி நடத்தினார்கள் என்று கேட்டபோது "கைரேகை மட்டும் எடுக்கவில்லை" என்றார் ஈரோஸ் பாலகுமார். மற்றபடி போராளிகள் கிரிமினல் குற்றவாளிகளைப் போலத்தான் நடத்தப்பட்டிருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஈரோஸ் இயக்கத்திடமிருந்து ஆயுதங்கள் எதுவும் பறிமுதல் செய்யப்படவில்லை. ஈ.பி.ஆர்.எல் எஃபிடமிருந்து 6 பாரல்களும் 800 பீரங்கிக் குண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. பீரங்கிக் குண்டுகளை இவர்களே சுயமாகத் தயாரிக்கின்றனர். பீரங்கிக் குண்டுகளைத் தயாரிப்பதற்கான கருவிகளும்கூட கைப்பற்றப் பட்டிருக்கின்றன என்று நம்பகமான சிலர் தெரிவிக்கின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கத்திடமிருந்து கணிசமான அளவு ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

> "திம்பு பேச்சு வார்த்தையைப் புறக்கணியுங்கள்; போராட்டத்தைத் தொடருங்கள்!" அன்று முழங்கினார்கள் ஈழ மக்கள். இன்று இந்திய அரசு நிர்பந்திக்கிறது. எதிர்க்க வேண்டியது இந்திய மக்களின் கடமை.

**தமிழகத்தில் ஆயுதப் பறிமுதல்**
**இலங்கையில் ராணுவத் தாக்குதல்**
**டெல்லியின் இரட்டை வேடம்**

ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்ட உடனேயே யாழ்ப்பாணத்திலும், கிழக்கு மாகாணங்களிலும் சிங்கள ராணுவம் உடனடியாகத் தாக்குதலில் இறங்கியது. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்று கேட்டபோது "பண ரீதியான மதிப்பை விட்டுத் தள்ளுங்கள். நெருக்கடியான இந்தத் தருணத்தில் எங்கள் கையிருப்பில் இருந்த ஆயுதங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டிருப்பதால் ஏற்படக்கூடியே உயிர் பலியைக் கணக்கிடுங்கள்" என்றார் ஒரு போராளி.

போராளிகள் கைது செய்யப்பட்டதும், வீடியோ படமெடுக்கப்

படிப்பகம்

www.padippakam.com

"அவர்கள் ஏன் மக்களை வேலையால் சாகடிக்கிறார்கள்? ஒரு மனிதனின் வாழ்நாளை அவர்கள் ஏன் கொள்ளையிட்டுப் பறிக்கிறார்கள்? எங்கள் முதலாளி... ஒரு பாட்டுக்காரிக்குக் குளிப்பதற்காக தங்கப் பாத்திரம் ஒன்றைப் பரிசளித்தான். அவளது படுக்கைக்குக் கீழே போடுவதற்கு ஒரு தங்கத்தாலான மூத்திரச் சட்டியைக் கூடப் பரிசளித்தான்; என்னுடைய பலமும் என்னுடைய வாழ்க்கையும் அந்தப் பாத்திரத்துக்குள்ளே போய்விட்டது. அதற்காகத்தான் நான் என் வாழ்க்கையைப் பறிகொடுத்தேன். என்னை வேலையைக் கொடுத்தே கொன்றுவிட்ட அந்த மனிதன் என்னுடைய வாழ்க்கையின் ரத்தத்தைக் கொண்டு அவன் அவளுக்குத் தங்கத்தாலான மூத்திரச் சட்டியை வாங்கிக் கொடுத்தான்"—உழைத்து உருக்குலைந்த ஒரு தொழிலாளி துயரம்!

—மக்ஸீம் கார்க்கியின் 'தாய்'

# பட்டு மஞ்சம் ஆனால் மரணபயம்

2+3+2=7; 2+2+3=7 இது என்னவென்று கேட்கிறீர்களா? இது ஒரு கணக்கு. சென்ற மாதம் 16, 17 தேதிகளில் பெங்களூரில் நடந்த தெற்கு ஆசிய வட்டார ஒத்துழைப்பு சங்க (சார்க்) இரண்டாவது உச்சி மாநாட்டுக் கணக்கு. இரண்டு பிரதமர்கள், மூன்று அதிபர்கள், இரண்டு அரசர்கள் ஆக ஏழு பேர். இரண்டு பௌத்தர்கள், இரண்டு இந்துக்கள்(!), மூன்று முஸ்லிம்கள் ஆக ஏழு பேர். இந்தக் கணக்கு நம்முடையது அல்ல. "நல்ல சேர்க்கை" என்று வருணித்து 'தேசிய' பத்திரிக்கைகள் கொடுத்த கணக்கு. இதிலென்ன பெருமை இருக்கிறது! ஒன்றுமில்லாததை ஊதிப் பெருக்குவதற்கு எதையாவது சொல்ல வேண்டுமே, அதற்காகக் கொடுக்கப்பட்ட கணக்கு.

(7+7)2=28. இது நமது கணக்கு. ஏழு பேர் கூடி இரண்டு நாள் கூத்தடிப்பதற்கு இந்திய மக்கள் இழந்த வரிப்பணம் 28 கோடி ரூபாய். இவ்வளவு பணத்தைப் பாழடித்து 'சார்க்' மாநாட்டின் போது ஈழ மக்களின் நலன்களை அடகு வைப்பதற்காக ஜெயவர்த்தனே—ராஜீவ்—பிரபாகரன் நடத்திய பேரத்தைத் தவிர குறிப்பிட்டுச் சொல்லும்படியான காரியம் ஒன்றும் நடக்கவில்லை.

முடிவு வருவதற்குள் எல்லா சுகபோகங்களையும் அனுபவித்து விட வேண்டும் என்கிற வெறியா? "ஊரான் வீட்டு நெய்யே, எனக்கு இன்னும் இரண்டு தொன்னை ஊற்று" என்கிற தோரணையில் மக்களின் வரிப்பணத்தை அளவு கடந்து அனுபவிக்கும் அற்பப் புத்தியா? எது விஞ்சி நின்றது என்று சொல்ல முடியாத அளவு ஆடம்பரக் கூத்து நடந்தது.

தெற்காசிய நாடுகளின் தலைவர்களுக்கு விருந்து கொடுக்கவும் அவர்கள் தங்கவும் செய்திருந்த ஏற்பாடுகள் அரச குடும்பங்களுக்குரிய முறையில் செய்யப்பட்டது. விருந்து நடந்த வின்ட்சர் மனேர் ஓட்டல் ரீஜன்சி கூடம் அரசு தர்பாருக்குரிய முறையில் அழகுபடுத்தப்பட்டது. 3000 சிகப்பு மற்றும்வெள்ளை ரோஜாப்பூக்கள், அரிதாகக் கிடைக்கும்விலை உயர்ந்த செந்தூரப் பூக்களைக் கொண்டு கூடம் முழுவதும் பூச்செண்டுகள் வைக்கப்பட்டன. கூடம் முழுவதும் கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டும் நீலவண்ணம் பூசினர். "சில்க்" பூ வேலைப்பாடுகளுடன் கூடிய "வெல்வெட்" திரைச் சீலைகள். அவற்றுக்கிடையே வரிசை, வரிசையாக சித்திர விளக்குகள் "வெல்வெட்" செண்டுகளுடன்கீழேதொங்கின.

விருந்துக் கூடத்தின் சன்னல்களில் ரோஜாக்கள் நிறைத்த பூ குப்பிகள். வெள்ளையும் நீலமும் கலந்த மேசை விரிப்பு. பூ வேலைப்பாடுகள் நிரம்பிய நீலநிற கம்பள தரை விரிப்பு—3 லட்சம் ரூபாய் விலையில் பானிப்பட்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. சித்திர வேலைப்பாடுகள் நிரம்பிய விதானம், எண்ணற்ற மின்னும் விளக்குகளுடன். இத்தனையும் தெரிந்தெடுக்கப்பட்ட 165 விருந்தாளிகளுக்கு. ஏழுநாட்டுத் தலைவர்கள் விருந்துண்ணும் இடத்துக்குப் பின்னணியாக அந்நாடுகளின் தேசியக் கொடி. அவர்களின் கிரிமினல் குற்றங்களை மூடி மறைக்க அவை அவசியந்தான்!

இரண்டு மணி நேரம் கடும் உழைப்புக்குப் பிறகு—மாநாட்டுத் திறப்புவிழா சடங்குகளில் கலந்து கொள்வது—ஓய்வு கொள்வதற்காக குளிர்வாச சுற்றுலாக் குன்று நந்தி மலையில் சிறப்பு ஏற்பாடு. உட்காரும் நாற்காலிகள்கூட விலையுயர்ந்த அழகிய தங்க மற்றும் வெள்ளி சரிகை வேலைப்பாடுகளுடன். மனைவிமார்களுடன் அவர்கள் தங்கும் அறைகள்—தவறு அந்தப்புரங்கள்—பிரதமரின்விருந்து இயக்குநர் பாமலேசிங் மேற்பார்வையில் சிங்காரிக்கப்பட்டன. ராஜீவும் சோனியாவும் தங்கும் ஆடம்பரமான டிராஃபல்கர் அறையின் மேல் மாடம் பாதுகாப்புக் கருதி மூடப்படும். ஆனால் உள்ளேயிருந்து பார்க்கக் கூடிய, வெளியிலிருந்து தெரியாத ஏற்பாடுடைய குண்டு துளைக்காத கண்ணாடி சன்னல்கள். மென்மையும் தொன்மையும் விரும்பும் சோனியா காந்தியின் கலை உணர்வுக்கு ஏற்ப நீலநிற வெல்வெட்டுத் துணிகளினால் அறை அலங்கரிக்கப்பட்டது. இத்தாலியர்களின்சாவைக்குறிக்கும்கரு நீலப் பூ இருக்கக்கூடாது என்று சோனியா உத்தரவு. எனவே அவர்களுக்கு மிகவும் பிடித்தமான செந்தூர மற்றும் வெள்ளை ரோஜாக்களால் அறை முழுவதும் அலங்கரிப்பட்டது. அவர்களுக்கு வெண்கலப் பாத்திரங்கள் பிடிக்காது. எனவே அவர்களுக்குப் பிடித்தமான பட்டைதீட்டப்பட்ட கண்ணாடிப்பாத்திரங்கள் பூக்களின் குப்பிகளாக வைக்கப்பட்டன. தரை யெங்கும் சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய கம்பள விரிப்புகள். "சாக்கலெட்" இனிப்புகள் என்றால் அவர்களுக்கு சபலம் அதிகம். எனவே பலவகை "சாக்கலெட்டு" இனிப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

எல்லாவற்றுக்கு மேலாக பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு கவனம் செலுத்தப்பட்டது. தொலைக்காட்சிப் பெட்டிகளினால் ஓட்டலின் மூலை முடுக்குகளைக் கண்காணித்தனர். இயந்திரத் துடைப்பங்கள், புகை கிளம்பினால் உடனடியாகத் தெரிக்கும் கருவிகள். மாநாட்டுத் தலைவர்கள் பரிவாரங்கள் தவிர வாடிக்கையாளர்கள் வெளியேற்றப்பட்டனர். வேறுயாரும் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் ஓய்வெடுத்த (!) நந்திமலையில் பாம்புகள் கொல்லப்பட்டன. குரங்குகளைப் பிடித்து பலமைல்களுக்கு அப்பால்கொண்டுவிட்டனர். அவையோ திரும்பித் திரும்பி வந்தன.

ஓய்வெடுத்த நந்திமலைதான் இப்படி என்றில்லை. "சார்க்" மாநாடு நடந்த பெங்களூர் நகரையே புரட்டிப்போட்டு அமர்க்களப் படுத்தி விட்டார்கள். மாநாடு நடந்த பெங்களூர் சட்டமன்றக் கட்டிடம்—"விதான் சௌதா" புதுப்பிக்கப்பட்டது. அனைத்து அர



படிப்பகம்

www.padippakam.com

சாங்கக் கட்டிடங்களும், தலைவர்கள் நடமாடும் சாலைகளில் உள்ள கட்டிடங்கள், அரசாங்க வாகனங்கள், அனைத்துக்கும் வர்ணம் பூசப்பட்டது. சட்டமன்றக் கூடம் இருக்கைகள் முழுவதும் ஆடம்பரமாக, கவர்ச்சிகரமாகப் புதுப்பிக்கப்பட்டது. தெருவிளக்குகள் ஒளி உமிழ்ந்தன. சாலைகள் தார் போடப்பட்டன. பூச்செடிகள் நடப்பட்டன. பாழடைந்து கிடந்த செயற்கை நீரூற்றுகள் நீரைப் பிய்ச்சி அடித்தன. பிரமுகர்கள் வருகையை ஒட்டி கலை விழாக்கள், குதிரை, யானை அணிவகுப்பு, கொம்பு, நாதசுர இசை முழக்கம்.

ஆனால் இத்தனையும் பார்ப்பதற்கு மக்கள் மட்டும் அனுமதிக்கப்படவே இல்லை. 10 கோடி ரூபாய் கொட்டி உலகத் தமிழ் மாநாடு நடத்தியபோதுகூட பத்து லட்சம் மக்கள் வேடிக்கை பார்க்கக் கூடினர். அதையே வெற்றுக் கேளிக்கூத்து என்று கிண்டல் செய்த முதலாளித்துவப் பத்திரிக்கைகள் இதைப் பற்றி வாய்மூடிக் கிடந்தன அல்லது வான்முட்டப் புகழ்பாடின. 'சார்க்' சங்கதி மக்களிடம் போக வேண்டும் என்று பேசினார் ராஜீவ். ஆனால் 'சார்க்' தலைவர்களே மக்களைக் கண்டஞ்சி விரட்டினார்கள்.

டெல்லியிலிருந்து பெங்களூருக்கு வந்த விமானங்களில் எல்லாம் 'ரா', தேசிய காவற்படை, உளவுப் படை, மந்திரிசபை செயலகம் உட்பட அதிகாரிகள் கூட்டம் வந்திறங்கியது. மரஞ்செடி கொடிகளையெல்லாம் அலசினர். எங்கு திரும்பினாலும் ஆயுத சோதனைக் கருவிகள். பல வெடிகுண்டுச் சோதனைக் குழுக்கள். நூற்றுக்கணக்கான போலீஸ் நாய்கள். ஹெலிக்காப்டர்கள் கண்காணிப்பு. திரும்பத் திரும்ப உயர்மட்ட அதிகாரிகள் சந்தித்து பாதுகாப்பு ஏற்பாடுகளை சோதித்தறிந்தனர்.

பெங்களூரில் 10 லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் நினைத்த வீடுகளில் புகுந்து ஆயிரக்கணக்கானவர்களை விசாரணையும் சோதனையும் நடத்தினர். தலைவர்கள் போகும் வழிகளிலும் நிகழ்ச்சிகள் நடக்கும் இடங்களிலும் இருந்து தொலை தூரத்தில் குடியிருப்பவர்களானாலும் சரி, தமிழ்ப் பெயர் இருந்தால் போதும் அவர்களது பூர்வீகத்தையும், உற்றார் உறவினர்கள் நண்பர்களது விவரங்களையும் விசாரித்தனர். திராவிடக் கட்சிகளின் பிரமுகர்களும், இலங்கைத் தமிழ் அகதிகளும் குறி வைத்துக் கண்காணிக்கப்பட்டனர். பெங்களூருக்கு வரும் பயணிகளும் அவர்களது மூட்டை முடிச்சுகளும் முதல் வாரத்திலிருந்தே சோதனையிடப்பட்டது. ராஜீவ் வருவதற்கு முதல்நாள் பெங்களூர் வந்த எல்லா வாகனங்களும் சோதனையிடப்பட்டன. சென்னைக்கும் மதுரைக்கும் உளவுப் படையினர் அனுப்பப்பட்டனர். தமிழ்நாட்டுடனான எல்லை மூடப்பட்டதாகவே கருதவேண்டும். தமிழர்களின் முகச் சாயல் தெரிந்தவர்கள் எல்லாம் சோதனையிடப்பட்டனர். அதே போன்று சீக்கியர்களின் வீடுகள், பூர்வீகம் விசாரணைக்குள்ளானது. இத்தனைக்கும் பிறகு தலைவர்கள் நடமாடும் இடங்களில் மக்கள் அனுமதிக்கப்படவே இல்லை.

1984 நவம்பர் டெல்லி சீக்கியப் படுகொலையிலே தனது நண்பனைப் பறிகொடுத்த பஞ்சாப் சங்ரூர் மாவட்ட கிராமத்து இளைஞன் கரம்ஜித் சிங் 1986 அக்டோபர் 2ந்தேதி ராஜீவை சுட்டுக் கொல்ல முயன்றான். இலங்கை ஜூலை இனப் படுகொலையில் உற்றார் உறவினரை இழந்த ஒரு தமிழனோ, டெல்லி சீக்கியப்படுகொலையில் உற்றார் உறவினரை இழந்த ஒரு சீக்கியனோ பழி தீர்ப்பதற்கு வந்துவிடுவார்கள் என்கிற அச்சம் அவர்களை விரட்டுகிறது. "ஒரு பெரிய வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவது போல அப்படிப்பட்ட ஒரு சீக்கியன், ஒரு தமிழன் இருக்கிறானா என்று தேடுகிறோம்" என்று புலம்பினார் ஒரு போலீஸ் அதிகாரி.

நடந்து முடிந்த 'சார்க்' உச்சி மாநாடு இரண்டு உண்மைகளைச் சொல்லுகிறது.

★ மக்களின் வரிப்பணத்தை வாரி இறைத்து உழைக்கும் மக்களின் உதிரத்தை அள்ளித் தெளித்து சுகபோகத்திலே மிதந்த பாசிச ராஜீவ்தான் "இந்தியத் தொழிலாளர்கள் சோம்பேறிகள், உலகிலேயே திறமையற்றவர்கள். நிறையு சம்பளத்தை வாங்கிக் கொண்டு அதற்கேற்ப உழைப்பதில்லை." "இந்தியாவில் எங்கும் யாரும் பட்டினிகிடக்கவில்லை" என்றார். இந்தத் தலைவர்கள் இவ்வளவு சுகபோகத்தை அனுபவிக்கும் இடத்தில் பிச்சைக்காரர்கள் கண்ணில் படக்கூடாது என்பதற்காக பெங்களூர் முழுவதும் வேட்டையாடினர். ஊருக்கு வெளியே கொண்டுபோய் அடைத்து பட்டினி போட்டனர். உலகிலேயே பரம ஏழைநாடுகளின் தலைவர்கள் அடிக்கும் கொட்டத்தைப் பாருங்கள்! பாசிஸ்டுகள் மக்களுக்கு உபதேசிப்பது வேறு! தான் செய்வதோ அதற்கு நேரெதிரானது.

★ தங்கம் வெள்ளி சரிகை மூடிய நாற்காலிகளும் முள்ளாய் குத்துகின்றன. அறுஞ்சுவை உணவும் கசக்கிறது. பட்டு மஞ்சங்களில் அந்தப்புரங்களில் உறங்கினாலும் மரணபயம் அவர்களை விரட்டுகிறது. ஜனநாயக விரோதிகள், மக்கள் விரோதிகள், தேச விரோதிகள் ஒருபோதும் இதிலிருந்து தப்பிவிட முடியாது.

● **சிவராஜ்**



பெங்களூர் ரயில் நிலையம்; சோதனை சீக்கியர்களுக்கு மட்டுமில்லை; தமிழர்களுக்கும் கூடத்தான்.



படிப்பகம்

www.padippakam.com



டிசம்பர் 2,1984. விஷவாயு போபாலைச் சூழ்ந்தது; உழைக்கும் மக்கள் குடியிருப்புகளை மட்டும் நெருக்கி ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களை நக்கிக் குடித்தது. ஐயோ என்று அலறக்கூடக் குரல் இல்லை; அடுத்த நிமிடம் இல்லை; இருட்டுக்கு அப்பாலும் இருட்டு; கண்ணுக்குள்ளேயும் இருட்டு.

யூனியன் கார்பைடு, இன்றும் இரண்டு லட்சம் உயிர்களை வாட்டி வதைத்துக் கொண்டு கொடிய சாட்சியாய் நின்று கொண்டிருக்கிறது. “நாங்கள் இருக்கிறோம் உங்களுக்கு சேவை செய்வதற்கு” என்று ஏஜென்சிகள் பணத்திற்கு நான்கு அமைப்புகள் திட்டமிட்டன.

ஒன்று—மத்தியப் பிரதேச செஞ்சிலுவைச் சங்கம்; மற்றது—போபால் கண் மருத்துவமனை; மூன்றாவது—ரோமன் கத்தோலிக்க சர்ச் நடத்தும் அகேப் (AGAPE)—விஷவாயுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போராடும் அமைப்பு, நான்காவது—அரசாங்க ரயில்வே மருத்துவமனை.

அமெரிக்காவில் வழக்கு எடுக்கப்படலாமா என்று அங்குள்ள நீதிமன்றம் உசாவியது. அதற்குள் மேற்கண்ட நான்கு அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றிய அத்தனைத் தகவல்களையும் திரட்டித் திருட்டுத்தனமாய் அனுப்பி வைத்தன. ஏறக்குறைய ஒன்றரை வருடம் ஓடிவிட்டது. அதன் பிறகு தீர்ப்பு வந்தது. அமெரிக்கத் தரத்தின்படி இந்த உயிர்களுக்கு, இந்தத் துயரங்களுக்கு ரூ 4100 கோடிப் பணம் நஷ்டஈடாக வழங்கவேண்டியிருக்கும். ஆக, சம்பவம் நடந்தது இந்தியாவில், இங்கேதான் விசாரிக்கப்படவேண்டும் என்று வழக்கை எட்டி உதைத்து இந்தியாவுக்குத் தள்ளி விட்டார்கள்,

ஜுலை 86—வழக்கு இங்கேயே வந்துவிட்டது. இதுவரை மக்களுக்காகச் சேவை செய்கிறோம் என்ற அமைப்புகள் சத்தமே செய்யாமல் மூட்டை கட்டிக்கொண்டு, இருந்த சுவடே தெரியாமல் காணாமல் போய்விட்டன. ஊர்வலம், ஆர்ப்பாட்டம், மாநாடு, கூட்டங்கள் அறிக்கைகள், பத்திரிக்கைச் சவால்கள், ‘தொண்ணூறுக்கும் தொள்ளாயிரத்துக்கும் சாதாரண மக்கள் பார்க்கக் கூடாத தொலைவிலே புத்தகங்கள் வெளியிட்டுக் கொண்டிருந்த ஆசாமிகள் காணாமல் போய்விட்டார்கள்.

இப்போது விஷயம் வெளியே வந்துவிட்டது—இந்த நாடகங்கள் ஆடியவர்கள் யூனியன் கார்பைடு அளித்த பிச்சைக் காசில்தான் வேஷங்கட்டினார்கள்; ஆடினார்கள். விடியப் போகிறது—இருட்டு கலையுமுன்பாகவே போய்விட்டார்கள். இதுதான் நடந்த கதை. அந்தக் கம்பெனி உளவாளிகள் இவர்களே!

இரண்டு ஆண்டுகளாகப் பார்க்கப்பட்ட வைத்தியம் பாதிக்கப்பட்டவர்களின் ரகசிய ஆவணங்களைக் கடத்திச் செல்வதற்காகத்தான். நேர்மையான அரசு மருத்துவர்கள் எவ்வளவோ வலியுறுத்தியும் விஷவாயுப் பாதிப்பிற்குத் தரவேண்டிய சோடியம் தையோ சல்பேட் மருந்து மட்டும் கொடுக்கப்படவே இல்லை.

ஏன் கொடுக்கவில்லை? அப்படி 2 லட்சம் பேருக்கு சிகிச்சை அளித்தால் யூனியன் கார்பைடிலிருந்து வெளியே வந்தது விஷவாயு என்று நிரூபிக்கப்பட்டுவிடும். விஷயத்தை மூடி மறைத்து விடத் திட்டம் போட்டார்கள், வாய்ப்பு வசதி மிக்க மருத்துவர்களும் இந்திய அதிகார வர்க்க நிறுவனங்களும்.

வென்றது யார்? உண்மையை எடுத்துச் சொல்லக் கூட மூச்சுப் பேச்சில்லாமல் துடிக்கின்ற, சித்திர வதைப்படுகின்ற இரண்டு லட்சம்



படிப்பகம்

www.padippakam.com

# போபால்

மக்களா? இல்லை. அமெரிக்கப் படைக் கழுகும், அவர்களுக்கு விசுவாசமாக நடக்கத் தெரிந்த எடுபிடிகளும், அவர்களது காலைக் கழுவிக் குடிக்கின்ற இந்திய அரசும்.

மக்கள்...அவர்கள் பேச முடியாது; உதவுங்கள் என்று கேட்க முடியாது; ஆற்றாது அழுது புலம்பக் கூட தெம்பில்லை; யாராவது பேசினால் கேட்கக் கூட செவிச் சக்தி இல்லை. நடை பிணமாய் நம் மக்கள்.

ஓடி, பறந்து, திரிந்து, கலகலப்பை எங்கும் பரப்பித் திரிந்து கொண்டிருந்த அஃப்ரோஸ்—ஏழே வயதுச் சிறுமி. அவளது வம்புப் பேச்சும், வேடிக்கைச் சிரிப்பும் எங்கே போயிற்று? அவளது முகத்திலே குமுறும் வேதனையும், கொந்தளிக்கும் நோவும் எப்போது வந்தது? அந்தக் கொடிய பனிகுளிர்ந்த டிசம்பர் இரவில்தான் அவளது வாழ்வின் சாரமே பறிக்கப்பட்டு விட்டது.

ரஜினி. எட்டே வயது. எங்கேயோ வெறித்த கண்கள், அஃப்ரோஸைப்போல. எப்போதும் ஜுரம். அவளது சகோதரி கேட்கிறாள் "எங்களுக்கு என்ன நடக்கும்?"

மக்கள்... பாதிக்கப்பட்ட மக்கள் இப்படித்தான் வாழ்கிறார்கள்.

கம்பெனியின் அமெரிக்க எசமான் சொல்கிறான். "தவறு எங்களுடையதல்ல. ஆலையைச் சுற்றிமக்கள் சென்றுவாழ்ந்தார்கள். பிழை செய்தது அவர்கள்தானே?"

இந்தியச் சட்டத்திலே இப்படிப்பட்ட பேரழிவைச் செய்த கொலைகாரனைத் தண்டிக்க சட்டம் கிடையாது என்று அறிந்த அமெரிக்கக் கூட்டம் நிச்சயம் செய்யும்—தன்மீது குற்றமில்லை, 'இந்திய அரசாங்கம்தான் இதற்குப் பொறுப்பு' என்று நிச்சயம் சொல்லும்.

இது மட்டும்தானா? செய்யாத குற்றத்துக்கு, சுற்றம் முற்றும் இழந்தார்கள் போபாலின் ஏழை மக்கள்; அவர்களை நம்ப வைத்து ஏமாற்றினார்கள் சிலர்; ஏஜென்சிகளின் பணம் லட்சக்கணக்கிலே பெற்று மக்களுக்கும் கொஞ்சம் மட்டும் 'நிவாரணமாகக்' காட்டி விட்டுப் பிழைப்பு தேடிக் கொண்டார்களே சிலர் — அவர்கள் ஒன்றரை ஆண்டுகாலம் மக்களை என்னவெல்லாம் கேவலமாகப் பேசினார்கள்.

'அகேப்'பின் பிரதான இணைப்பாளர் 'ஏசுவின்பெயரால்பாவம்செய்யும் அருள் மிகு தந்தை டெனிஸ் கார்னைரோ சொன்னார்: "உடம்புக்கு நோவு, ஜுரம் வந்து விட்டது என்று இந்தக் குடிசை வாசிகள் என்னமாய் நாடகமாடுகிறார்கள்? அமெரிக்காவிலிருந்து வரும் நாறும் நரகலுக்காக என்னவெல்லாம் மாய்மாலம் செய்கிறார்கள்? ஒரே இரவுக்குள் லட்சாதிபதியாகிவிட வேண்டுமாம்—என்ன அற்ப ஆசை?"

அவரது உடல் பூராவும் கருணை ததும்பும் ரத்தமாக ஓடுகிறது. அற்பப்பதர்! அமெரிக்காவின் நாறும் நரகலின்மீது படுத்துப் புரளுபவருக்கு என்னமாய் அருள் வாக்கு சுரக்கிறது பாருங்கள்!

அத்தனைக்கும் சிகரம்போல யூனியன் கார்பைடு ஆலையின் போபால் நிர்வாகி முகுந்த் என்ன சொன்னார் தெரியுமா? "ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது. எவ்வளவோ லட்சியங்களை நாம் அடைய வேண்டும். அவை எங்கோ எட்டாத இடத்திலே இருக்கின்றன. இந்திய நாடோ மிகமிகப் பின்தங்கிய நாடு. நாம் வளர வேண்டுமென்றால், எங்கேயாவது போகத்தான் வேண்டும்; எங்காவது இழந்துதான் தீரவேண்டும்."

இன்னொருவர், இந்த நாட்டின் சட்டங்களையே கரைத்துக் குடித்தவர், பொருளாதார விற்பன்னர் என்று போற்றப்படும் டாட்டாவின் கூட்டாளி நானி பல்கிவாலா. யூனியன் கார்பைடுக்காக அமெரிக்கக் கோர்ட்டிலே பிராது கொடுத்த இவர் சொன்னார், "இந்திய அரசும் மக்களும் அமெரிக்க நீதி அரங்கிலே பேரம் பேசுகிறார்கள். 'நஷ்ட ஈடு' என்ற மெல்லிய போர்வையின் கீழே அமெரிக்க ஊதவியைத்தான் 'உண்மையில்' அவர்கள் பெறுவதற்கு வந்திருக்கிறார்கள்"

இவர்கள் அவதூறு மட்டும் செய்யவில்லை. நமது அருமை மக்களுக்குத் துரோகம் மட்டும் செய்யவில்லை. நமது நாட்டையேவிற்றுக் கொடுக்கிறார்கள், கயவர்கள். இரண்டாயிரம் மக்கள் விஷவாயுவால் கொலைசெய்யப்படுவதும், இரண்டு லட்சம் மக்கள் வாழ்வா சாவா என்று நடைப் பிணமாய் வாழ்வதும் அவசியமான இழப்பாமே! சர்வ சாதாரணமான இழப்பாமே!

மக்களின் உயிர்களை விலை பேசி தரகு முதலாளிக் கூட்டம் விற்று வருகிறது—சொந்த நலனுக்காக. மிகப் பெரிய படுகொலை, ரத்தக் களறி, மனித வேட்டை எத்தனை பகிரங்கமாக மக்களுக்கு முன்னே நியாயப்படுத்தப்படுகிறது—'ஆலை அருகே ஏன் வாழ்ந்தார்கள்?' ஒற்றைக் கேள்வியில் அடக்கிவிட்டார்கள். அத்தனை லட்சம் ஏழைப் பாட்டாளிகளின் குருதியை மலிவு விலைக்குக் குடிக்கத்தானே இங்கே யூனியன் கார்பைடு ஆலையைத் திறந்தார்கள்?

ஓட்டுக் கட்சிகள் ஒருபுறம்; ஓட்டைச் சட்டம், அரசு மறுபுறம். மிச்சசொச்சம் சீர்திருத்தம் செய் செய்கிறேன் என்று கார்பைடின் காசை வைத்தே வேலை காட்டி விட்ட ஏஜென்சி எடுபிடித் துரோகிகள் இன்னொருபுறம்—இவர்களின் சாட்சியாக ஒரு பெரிய கொலையை நியாயப்படுத்தி விட்டார்கள்.

போபாலின் பழைய நகரம் ரத்த வீச்சோடு நாறுகிறது. லட்சக் கணக்கான மக்களை உயிரோடு அங்கே அரசு புதைத்துக் கொண்டிருக்கிறது. அந்த உயிர்க் கல்லறை மேலேயே அதே யூனியன் கார்பைடோடு இந்திய அரசு கோடிக் கணக்கில் புதிய ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறது.

கொலை பாதக துரோகத்தனமான அரசு இனியும் நீடிக்க வேண்டுமா? 'என்ன ஆகுமோ' என்று பயந்து சாகும் துர்காதேவி, ரஜினி, ஓயாது அழும் ஒரு வயது சலீம், சுருட்டிப் போட்ட துணி மூட்டையாகிக் கிடக்கும் துர்காபாய், தனது துயரங்களை எல்லாம் ஒரேயடியாக விழுங்கி ஏப்பமிட்டு வரும் சாவு வரக்கூடாதா என்று ஏங்கும் கோமல்பாய்—இவர்கள் வாழும் நம்பிக்கையையே இழந்துவிட்டார்கள். இவர்களை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். இப்படி நடை பிணமாய் இரண்டு லட்சம் பேர் வாழ்கிறார்களே—இவர்கள் உங்கள் சக மக்கள் என்று நினைத்துப் பாருங்கள் ஒருகணம்.

அஃப்ரோசின் கண்களிலே ததும்பும் கண்ணீருக்கு, தெறித்து விழாது உங்களைக் கேள்வி கேட்பதற்காகவே வீரியமாய் நிற்கும் ஒரு கண்ணீர் துளிக்குப் பதில் சொல்லி விட்டு அப்புறம் போங்கள்.


படிப்பகம்

www.padippakam.com



# இப்ப சொல்லு நீ எந்த சாதி?

"அடி செருப்பால நாய; மூஞ்சியும் மொவரையும் பாரு; திமிரு புடிச்சக் கழுத."

பின்னாலிருந்து வந்த சத்தத்தைக் கேட்டதும் நீலா வெடவெடத்துப் போனாள். முழங்கால் தண்ணீரில் நின்று கொண்டிருந்தவளுக்கு பாதிப்பாவாடை நனைந்து விட்டிருந்தது. கைகள் நடுங்க, அலுமினிய செம்பிலிருந்த தண்ணீர் சிதறித் தெறிக்க விருட்டென்று ஓட்டமெடுத்தாள்.

நீலா பதிமூன்றே வயதான சேரிச் சிறுமி. உள்ளூர் பள்ளியில் ஆறாம் வகுப்பு மாணவி.

நன்றாகத்தான் சுற்றுமுற்றும் பார்த்தாள். எட்டிய தூரம் மட்டும் யாருமே இல்லை என்று உறுதிப் படுத்திக் கொண்டுதான் குளத்தில் இறங்கினாள். மாணிக்கத்தின் வரவுக்காக ரெட்டைப் பனையின் இடுக்கில் காத்திருந்த காமாட்சியை மட்டும் அவள் கவனிக்கவில்லை.

அது புதுப்பாளையம் கிராமத்திலிருந்த ஒரு செந்தாமரைக்குளம். மேல் சாதிக்காரர்கள் மட்டும் தான் தண்ணீர் எடுக்க வேண்டும். சேரி சனங்கள் பாசி படர்ந்த எதிர்கரையில், ஆத்திர அவசரத் தாகத்துக்கு கைகளால் அள்ளிக் குடிக்கலாமே தவிர அவர்களின் பாத்திர பண்டங்களை பயன்படுத்தவிடக் கூடாது என்பதெல்லாம் ஊர்க் கட்டுப்பாடு.

செப்புக் குடத்தை மொத்தென்று மணலில் போட்டாள் காமாட்சி. அவளுக்கு ஆத்திரமும் அழுகையுமாய் வந்தது.

"ஐயோ இப்ப நான் என்ன பண்ணுவேன், இந்த சனியன் வந்து கவுச்சி சொம்ப அலசி வுட்டுட்டுப் போயிருச்சே... நான் எங்க தண்ணி எடுப்பேன்" என்று செய்வதறியாமல் பிதற்றிக் கொண்டிருந்தாள் காமாட்சி.

மாணிக்கம் அப்போதுதான் வந்தான். விபரம் புரியாமல் விழித்து, சுற்றுமுற்றும் பார்த்தவனுக்கு கையில் செம்புத் தண்ணீருடன் காற்றாய் பறந்து கொண்டிருந்த நீலாவைக்கண்டதும் விஷயம் விளங்கி விட்டது. கொஞ்ச நேரம் அமைதியாய் இருந்துவிட்டு பின் லேசாய் சிரித்துக் கொண்டான்.

"அதனாலென்ன காமாட்சி, அதோ அந்த பக்கமாய் போய் தண்ணி எடுத்துக்கிட்டு போயேன். அங்க எரும மாடுங்கதான் குளிச்சிக்கிட்டிருக்கு. அதனால ஒண்ணும் பாதகமில்லியே." சொல்லி விட்டு குறும்பாய் சிரித்துக் கொண்டே ஓரக்கண்களால் அவளைக் கவனித்தான்.

காமாட்சிக்கு பற்றிக் கொண்டு வந்தது. கை நிறைய மணலை அள்ளி அவன் மேல் வீசினாள். "நான் அழுவுறது உனக்கு சிரிப்பாயிருக்குல்ல." கோபம் கொப்பளிக்க வெடுக்கென முகத்தை திருப்பிக் கொண்டு முந்தானையால் கண்களைத் துடைத்தவாறே வீட்டைப் பார்த்து நடக்க ஆரம்பித்து விட்டாள்.

ஒன்றுமே பேசாமல் மாணிக்கமும் பின் தொடர்ந்தான். பின் பொறுமை இழந்தவனாய்,

"எதுக்கு என்ன வரச்சொன்ன, இப்படி முறுக்கிக்கிட்டு போயிகிட்டேயிருக்குற . ம்... உனக்கு என்ன ஆச்சி இப்ப?" என்றான்.

"எனக்கு ஒண்ணும் ஆகல. உனக்குத்தான் மூளை கலங்கிப் போயிறுச்சி. ஆளே மாறிப் போயிட்ட. டவுனுக்குப் போனதிலிருந்து உன் நடவடிக்கையே சரியில்ல. உனக்கு இப்பல்லாம் என் நினைப்பு கூட வர்றதில்ல."

மௌனமாகவே நடந்துகொண்டிருந்த காமாட்சி, மனதில் அடைத்து வைத்திருந்ததையெல்லாம் மொத்தமாய் கொட்டித் தீர்த்தாள். ஆசைகள் எல்லாம் அழிந்து போனதைப் போல் தாங்கமாட்டாமல் தேம்பிக் கொண்டேத் திக்கித் திக்கி என்னென்னவோ பேசினாள்.

"நீ இப்பல்லாம் சாதியில்லைங்கிற, சாமியில்லைங்கிற, நமக்கு குத்தகைக்கு நிலங்குடுத்து கஞ்சி ஊத்திர புண்ணியவான பகையிங்கிற. சுப்பு சித்தப்பாதான் அங்க உன்ன பாத்தாரமில்ல. அவரு சொன்னது எல்லாம் சரியாத்தான் இருக்கு. உனக்கு மூளைதான் கலங்கிப் போயிருச்சி."

"அங்க என்னமோ ஒரு சங்கத்துல சேர்ந்திருக்கியாம், கண்ட சாதிக்காரங்கள, பள்ளு பறையின்னு கூட பாக்காம, வீட்டுக்கு கூட்டியாருவியாம், அவனுங்கள சமனுக்கு சமனா உக்கார வச்சு பேசுவியாம். அப்புறம் பொட்டச்சிங்களோட வேற அதே மாதிரி பேசிக்கிட்டேயிருப்பியாமா..."

சற்றே நிறுத்தி மூச்சை யிழுத்து விட்டுக்கொண்டு தொடர்ந்தாள்.

"ம்...இதெல்லாம்நல்லதுக்கில்ல, ஆமா. நம்ம சாதி சனம் ஏத்துக்குமா இத? இல்ல, ஊரு உறவுக்குத்தான் அடுக்குமா? நாளைக்கு நம்மள தள்ளி வச்சிரமாட்டாங்க?" சடக்கென முகத்தை ஒரு சிலுப்பு சிலுப்பி, "அட, ஊருஉலகத்த வுடு. உனக்குத்தான் அது எப்படி ஒப்புது?" கண்களை இடுக்கி, முகத்தைச் சுருக்கிக் கொண்டு இவன் மூக்குக்கருகில் விரல்களை விரைப்பாக நீட்டிப் பேசினாள். பேச்சிலேயே அவளின் அருவெறுப்பு நன்றாகத் தெரிந்தது.

மாணிக்கம் பல்லைக் கடித்துக் கொண்டு பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். பின் மெதுவாக,

"காமாட்சி, முடிஞ்சுதா; ஏதும் பாக்கியிருக்கா?" என்று கேட்டு விட்டு "நானும் உன்ன மாதிரியே ஆவேசமா பேசினவன்தான்னு உனக்கே தெரியும்."

"நம்மள மாதிரியே உழைச்சிக் கஷ்டப்பட்டு சாப்பிடுறவங்கள, நாமளாவே அவங்களுக்கு ஒரு சாதிப்பேரு ஒண்ணு வச்சுப்பிட்டு, மனசறிஞ்சி அவங்கள மான அவமானமில்லாதவங்களா கருதி நடத்துறது எந்த வகையில நியாயம்? அவங்கள கேவலமா நடத்த நமக்கு என்ன உரிமையிருக்கு? இப்படி நம்மள நாலுபேரு செஞ்சா நமக்கெப்படியிருக்கும்? அதனாலதான் நாங்க அத தப்புன்னு சொல்றோம்"

"இதெல்லாம் ஓரளவுக்கு உணர்ந்ததுக்கப்புறமும் என்ன பழைய மாதிரியே நடந்துக்கணுமின்னு நீ விரும்பினியின்னா, அது என்னால முடியாது. நீ என்ன மொத்தமாவே மறந்துட்டாலும் சரி. இப்பகூடத்தான் உன் நினைப்பே எனக்கு வர்றதில்லைன்னு நீ பேசின. நீ மட்டும் இந்த ஊர்ல இல்லைன்னா எனக்கு இங்க என்ன வேல?" "என் சங்கத்தோட கொள்கையெல்லாத்தையும் மாமாவுக்கும் அத்தைக்கும் இல்லாட்டி போனாலும், உனக்காவது புரிய வச்சிட முடியும்ங்கிற நம்பிக்கையில தான் நான் இன்னமும் நெனச்சுக்கிட்டிருக்கிறேன். அதுக்கமேலஉன் இஷ்டம்." மாணிக்கம் தன் நிலையை தெளிவுபடுத்தி விட்டதைப் போல் உறுதியாக மனசுகலங்காமல் பேசி முடித்தான்.

"ஒண்ணும் இல்ல. நான் உம் மேல உசிரயே வச்சிருக்கிறங்கிறத தெரிஞ்சுக்கிட்டுத்தான் நீ இப்படி என்ன சித்திரவதை பண்ற. கல்யாணம் கட்டச் சொன்னா சடங்கு செய்ய மாட்டேன், தாலி கட்ட மாட்டேன்னு கண்டிசன் போடற. நான் மட்டும் பிடிவாதமா இல்லைன்னா உங்க மாமாவும் அத்தை



படிப்பகம்

www.padippakam.com

யும்தான் இதுக்கு ஒத்துக்கிட்டிருப்பாங்களா?'' காமாட்சி இன்னும் தேம்பிக் கொண்டே தான் பேசினாள்.

சிறிது நேர மௌனத்துக்குப் பின் கண்களை முந்தானையில் துடைத்துக் கொண்டு, "நீ எப்படி வேணா இருந்துட்டுப் போ. எப்ப நான் உன்ன மனசுல நெனச்சிட்டேனோ, உனக்குத் துணையா வாழ்ந்துட்டு செத்துட்டன்னா போதும்.'' காமாட்சியின் குரல் அழுதழுது களைத்துப் போயிருந்தது. "நீ என்னசெய்வியோ, ஏதுசெய்வியோ எனக்குத் தெரியாது. வர்ற மாசத்துக்குள்ள என்ன கல்யாணங்கட்டி கூட்டிக்கிட்டுப் போயிறு.'' கடைசியில் உத்தர விடுவதைப் போல் சொல்லிமுடித்தாள்.

அப்படியே மௌனமாய் வீடு சென்றவர்கள்தான். கல்யாணம் முடியும் வரை அவர்கள் மீண்டும் சந்தித்துக் கொள்ளவேயில்லை. காதலர்களாய் சந்தித்த கடைசி சந்திப்பு அதுதான்.

● ● ●

வெளித் தெருவில் நாய்களின் ஓலம் காமாட்சியின் சிந்தனையை கலைத்தது.

வருவது மாணிக்கமாகத்தான் இருக்க வேண்டும். காமாட்சிக்கு எழுந்திருக்கவே மனம் இல்லை. சுவற்றில் சாய்ந்தவாறே காலை நீட்டி உட்கார்ந்து கொண்டிருந்தாள். எங்கும் ஒரே இருட்டு. மழையும் இப்போதுதான் ஓய்ந்திருந்தது. தவளைகளின் வரட்டுச் சத்தம்தான் கேட்டுக் கொண்டிருந்தது. சில மாதங்கள் ஆகியிருந்தாலும் சில சம்பவங்களும் சம்பாஷனைகளும் காமாட்சிக்கு இம்மியும் மறக்கவில்லை.

"காமாட்சி ... காமாட்சி'' மாணிக்கம்தான் கதவைத் தட்டினான்.

எழுந்து போய் கதவைத் திறந்து விட்டு விளக்கைப் பொருத்தி விட்டு மீண்டும் வந்து அதே இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

மாணிக்கம் அவனாகவே அள்ளிப் போட்டு சாப்பிட்டுக் கொள்வான். தூங்கும் போதும் எழுப்பமாட்டான். இந்த பழக்கம் மட்டும் அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

காமாட்சி, கிராமத்தில் குடிசை தான் என்றாலும் விசாலமான இடத்தில் இருந்து பழகியவள். அத்தோடு சேரி மக்கள் அவளிடம் காட்டிய பணிவும் மரியாதையும் அவள் வெகு உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதாய் எண்ணிக் கொண்டிருந்தாள்.

இங்கே நகரத்தில் எத்தனை அதிசயங்களும் ஆடம்பரங்களும் இருந்து என்ன? மாணிக்கத்தின் வசதிவாய்ப்புக்கு சாக்கடையோரத்துக்குடிசை பகுதிதான். இந்த சூழ்நிலையே கொஞ்சமும் பிடிக்கவில்லை. எங்கும்சாக்கடை நாற்றம், ஆட்களும் அப்படித்தான். யாரிடமும் பேச்சில் அடக்க ஒடுக்கம் இல்லை. வயது வரம்பு என்று மட்டு மரியாதை இல்லை. அதனால் இவர்கள் எல்லோருமே சேரி ஜனங்களாக இருப்பார்களோ என்றொரு சந்தேகம் உன் மனசில். ஆகவே அக்கம்பக்கத்தில் யாருடனும் அதிக பழக்கம் வைத்துக் கொள்வதில்லை. பக்கத்து வீட்டுப் பெண்கள் மாணிக்கத்திடம், "என்னண்ணே கடைசியா உன்ன மாதிரியே பட்டிக்காட்டப் போயி கூட்டிகிட்டு வந்துட்ட'' என்று இவள் காது படவே கேலி பேசுவார்கள்.

அதே போலத்தான் சங்கத்துத் தோழர்களிடமும், தாழ்த்தப்பட்ட சாதியோ என்று அவள் சந்தேகிப்பவனைமுடிந்தவரை வாசலிலேயே வைத்துப் பேசி அனுப்பி விடுவாள்.

காமாட்சியைப் பொருத்தவரை சேரி சனங்களுக்கு பளிச்சென்ற அடையாளம் நிறம்தான். நிறம் கருப்பாக இருந்து கொஞ்சம் வெள்ளையும் சள்ளையுமாயிருந்தால் அவ்வளவு வித்தியாசம் பாராட்ட மாட்டாள். ஆனாலும் வேலைக்குச் செல்லும் சில நாட்களில் கிடைத்த அனுபவங்கள் அவளைக் கொஞ்சம் யோசிக்க வைத்து விட்டன.

● ● ●

அன்று அலுவலகக் கட்டிடம் ஒன்றில் மொசைத் தளம் போடும் வேலை. காமாட்சியும் கமலா என்ற இன்னொரு பெண்ணும் பலகை கற்களை மாடிக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தனர். கமலாவின் சற்றே இருண்ட நிறத்தையும் அழுக்கேறிய உடையையும் கண்டு அவள் சேரிப் பெண்ணாக இருப்பாளே என்ற சந்தேகத்தில் சற்று ஒதுங்கியே இருந்து வந்தாள், காமாட்சி. மேல் மாடிக்கு படிக்கட்டுகளில்தான் இருவரும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தார்கள். கமலாவுக்கு மட்டும் அங்கு இருந்த 'லிப்டி'ன் மேல் ஒரு கண். எப்போது வாய்க்கும் என்று எதிர்பார்த்த வண்ணமாய் கவனித்துக் கொண்டேயிருந்தாள். ஒரு முறை காலியாக நின்று கொண்டிருந்ததை பார்த்ததும், படபடத்தாள் கமலா.

காமாட்சிக்கு அதில் பயணம் செய்யவே பயம். அதிலும் யார் என்னசொல்லிவிடுவார்களோ என்ற அச்சம் வேறு. ஆனாலும் போய்ப் பார்க்கவேண்டும் என்று ஆசையாகவும் இருந்தது. கமலா இவளை யோசிக்கவே விடவில்லை. விருட்டென்று புடவையை பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினாள். இருவரும் லிப்டில் ஏறிக் கொண்டார்கள். கமலா கதவை மூடும் பட்டனை அழுக்கப் போகும்போது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வேகமாய் வந்து உள்ளே நுழைந்து கொண்டார்கள்.

இருவருமே வாட்டசாட்டமாகவும், வாலிபமாகவும் இருந்தனர். பெரிய வேலையில் இருப்பவர்களாயிருக்க வேண்டும். அவளின் மஞ்சள் நிறப்புடவையும் ரவிக்கையும் கூடவே அவளின் வெளிர்



படிப்பகம்

www.padippakam.com

'நமது நிலைப்பாட்டின் நிலையிலிருந்து தன்னார்வக் குழுக்களின் மத்தியிலும் அவர்களால் பாதிப்புக்குட்பட்ட மக்கள் மத்தியிலும் நாம் தலையிடுவோம்' என்கிறது புதிய மனிதன். ஆம், தன்னார்வக் குழுக்களில் தலையிடுவதுதான் இவர்களது நிலைப்பாடு. தலையிட்டால் என்ன நடக்கிறது—'ஏகாதிபத்திய நலன்களைப் பிரதிபலிக்கும் நிதி உதவி நிறுவனங்களின் நோக்கங்களுக்கு இசைந்ததாக இருப்பதால் அவர்கள் தன்னார்வ நிறுவனங்களுக்குப் பண உதவி செய்கின்றனர்... இந்த தன்னார்வ நிறுவனங்கள் தலையிடும் அனைத்து இடங்களிலும் அந்நிய நிதியின் விளைவாக கலாச்சாரச் சீரழிவு பரவுகிறது' என்று புதிய மனிதனே வாக்குமூலம் தருகிறது. ஆக, அதில் தலையிட்டால் நேரும் கதி சீரழியும் அதோ கதி! இதற்கொரு நிலைப்பாடு; 'அதை எதிர்த்து வா பார்க்கலாம்' என்று சவால் வேறு. சாரமாக த.ம.முவின் (புதிய மனிதனின்) துரோக நிலைப்பாட்டில் மாற்றமேயில்லை.

**துரோகம் செய்பவர்கள் கற்றுத் தருகிறார்களாம்!**

ம.க.இ.க. கொள்கை அறிக்கையிலேயே கோளாறு இருக்கிறது என்று சொல்பவர்கள் யார்? இவர்கள்தான். 'கேள்விகளை அடுக்குகிறேன், கொள்கை அறிக்கையிலேயே எல்லாப் பதிலையும் கொடு' என்று கேட்கிறார்கள். யார்? அத்தனைக்கும்விரிவான பதிலைப்போட்டிருக்கும்மக்கள் பண்பாட்டுமையம் (ம.ப.மை) கொள்கை அறிக்கை படைத்தவர்களா? இல்லை. இந்தியாவில் உள்ள அத்தனைப் புரட்சிக் கலாச்சார அமைப்புக்களுமே எத்தனை விரிவாகக் கொள்கை அறிக்கையை வெளியிட்டிருக்கின்றன என்பதை இவர்கள் அறிவார்களா? அவை அப்படி வெளியிடவில்லை.

கொள்கை அறிக்கை என்பதே ஆய்வுக் கட்டுரை போல இருக்காது. சுருக்கமான பொதுக் கோட்பாடுகளை விளக்கும்—தற்போது இந்திய நிலைமையினைச் சாரமாக படம் பிடிக்கும்; வரலாற்று ரீதியாக முக்கிய அம்சங்களைக் கோடிட்டுக் காட்டும்; லட்சியம், செயல்வழியை தெளிவாகச் சொல்லும்; கடமை, உடனடிக் கடமை, பணிகளை வரையறுக்கும்; புரட்சிக் கலாச்சார லட்சியத்துக்குப் போராடப்பொருத்தமான அமைப்பு விதிகளைக் கறாராகச் சொல்லும். ம.க.இ.க. இதைச் செய்திருக்கிறது. இந்த அளவுக்காவது ம.ப.மை அறிக்கையை வைத்திருக்கிறதா?

அது மட்டுமல்ல; கொள்கை அறிக்கையின் அடிப்படையில் ஆறாண்டு கால இயக்கங்களும், மூன்றாண்டு கால புதிய கலாச்சாரமும்இவர்கள் கேட்கின்ற அத்தனை விஷயங்களுக்குமே — முக்கியமாக **அரசியல் — கலாச்சார பிரச்சனை**களுக்கு தெளிவான, விரிவான, நடைமுறைஎடுத்துக்காட்டுகளோடு கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறது; மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்திருக்கிறது; நேரடி ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறது. இத்தனைக்கும் கண், காது, வாய் பொத்தி இருந்துகொண்டு 'அதுக்கு என்ன சொல்கிறாய்? இதுக்குஎன்ன சொல்கிறாய்?' என்று இப்போது கேட்கிறார்கள்.

**வந்தாரய்யா நாடக பஃபூன்!**

கிராமப்புறத்திலே கூத்து நடக்கும். சில இடங்களில் மக்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள். அந்த நபர் ஆகாகா என்று அட்டகாசமாக வந்து ஆடுவான், பாடுவான், மிடுக்காக நடை போடுவான்; கர்ண மகாராஜன் வந்தேனே என்றெல்லாம் குதிப்பான்—அவன் ஆட ஆட மக்கள் சிரிப்பார்கள். காரணம், அந்த நபர் கர்ணமகாராஜன் வேஷம் போடும் பாத்திரம் அல்ல. பஃபூன்தான். புதிய மனிதனது பதிலைப் பார்த்தால் அப்படித்தான் இருக்கும். ஏகமாக கேள்விகளை அடுக்கி இருக்கிறார்கள். உள்ளே நுழைந்து பாருங்கள், ஒருநிலைப்பாடுகூட இல்லை.

புதிய மனிதன் எழுதுகிறது: "நமது தேசீயக் கலாச்சாரம் என்று எதனைக் குறிப்பிடுகிறீர்கள்? இந்தியக் கலாச்சாரத்தையா? தமிழ்க் கலாச்சாரத்தையா? இரண்டுக்கும் இடையேயான உறவு என்ன?"

தேசீய இனங்களுக்கும், மொழிகளுக்கும் உள்ள உரிமை பற்றி வரையறை ம.க.இ.க அறிக்கையில் உண்டு; தேசீயக் கலாச்சாரம் என்று ஆளும் வர்க்கம் பசப்புகிற கலாச்சாரம் பொய்யானது என்பதில் திடமான கொள்கை எமக்கு உண்டு.

எடுத்துக் காட்டாக: தமிழகத்தில் வழங்கப்படும் கிராமிய-மக்கள் இசை வடிவங்களை முதன்மையான மூலப்பொருளாக நாங்கள் எடுக்கிறோம்; நிலப்பிரபுத்துவப் பின்னணியில் வளர்க்கப்பட்டுள்ள இசை முறைகளையும், இசைக் கருவிகளையும் நிலப்பிரபுத்துவக் கசடுநீக்கிப் பயன்படுத்துகிறோம்—கசடுகள் நீக்க பாட்டாளி வர்க்கப் பார்வையைப் பிரதான கருவியாகக் கொள்கிறோம். உணர்ச்சியின் ரசங்களுக்கேற்ப சில அடிப்படை ரசங்களுக்கான ராகங்களை எடுத்து ஆள்கிறோம்; மேலும் சில ரச—ராகங்களை எடுத்து மரபுமுறையை உடைத்து எழுச்சியான ராகமாக்குகிறோம்—இதை எப்படிச் செய்தோம்? முக்கியமாக, புதிய உள்ளடக்கத்தைக் கொடுத்ததன் மூலம் செய்தோம். (கர்நாடக, இந்துஸ்தானி முறையில் அவ்வாறு எழுச்சிமிக்க ராகங்கள் இல்லை என்பதே உண்மை) இதை மா-லெ—மாவோ கோட்பாடுகளிலிருந்து கற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்தியும் வந்திருக்கிறோம். அதே சமயம், வலுவான நிலப்பிரபுத்துவச் சாரத்தோடு பன்னிப் பன்னிப் பின்னப்படும் இசை வடிவங்களை மிகக் கவனமாக ஒதுக்கிவிடுகிறோம்.

கொள்கை அறிக்கையில் இதனைக் கோடிட்டுக் காட்டியுள்ளோம்; அதுமட்டுமல்ல—எஜென்சியின் காசு வாங்கி கொள்கைப் பாடல்களை இசைத் தட்டுப் போட்டது த. ம. மு. அதன் தோழமை ஏடான புதிய மனிதனுக்கு சொல்லிக் கொள்கிறோம்—கோட்பாடுகளோடு நாங்கள் நிற்கவில்லை; மக்கள் இசையையே நடைமுறை பிரச்சாரப்படுத்தியும் வருகிறோம். தமிழக மக்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

**சாக்குப் போக்குக்கு ஒரு சாருமதி!**

புதியமனிதன் ஜூன் 86-ல் எமக்குப் பதில் தருவதாகச் சொல்லி பல பித்தலாட்டங்களைச் செய்திருக்கிறார் சாருமதி. எ—டு. ஒன்று: மொட்டைக் கடுதாசிக்காரர் இஸ்மாயில் பற்றிய எமது விமரிசனத்தில் டெங்ஒரு திரிவுவாதி என்று சாடியிருந்தோம்.

புதிய மனிதனின் பதிலில் ஒட்டாண்டி அரசியலைப் பாருங்கள். "இந்திய விடுதலையில் தலையிடாத வரையில் நமக்கு 'டெங்'கைப் பற்றியோ இன்றைய சீனாவின் போக்கைப் பற்றியோ கவலையில்லை. சீனம், புதிய ஜனநாயகப் புரட்சியைத் தாண்டி சோசலிசக் கட்டுமானத்தின் பிரச்சினைகளில் பயணம் செய்கிறது." சீனம் பற்றிக் கவலையில்லை என்று சொல்லி முடிப்பதற்குள்ளேயே, 'சீனம் சோசலிசக் கட்டுமானத்தில் உள்ளது' என்கிறார்கள். (ஒரு முதலாளித்துவ நாட்டை சோசலிச நாடென்கிறார்கள்—அது இருக்கட்டும்.) கவலையில்லை. கருத்து சொல்லமாட்டேன் என்று சொல்லிக் கொண்டே சீனம் சோசலிச நாடு என்று கூறுவது ஒரு சார்புக் கருத்துதானே.

எடுக்கக்கூடியகேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் தவிர்க்க இந்த அம்மானை வித்தைகள் காட்டுவது இடைச்சாக்குகள், அவ்வளவுதானே?

மேலும் ஒன்று: புரட்சிக் கலைஞர் **சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி அக்கறைப் படுவார்.** அதனால், எமக்கு சீனப்பிரச்சனை பற்றிப் பார்க்க உரிமை உண்டு. ஆனால், இந்தியப் புரட்சியையே ஏஜென்சிகளிடம் அடகு வைத்த பிறகு உங்களுக்கு எதற்கு அந்தக் கவலை எல்லாம்? ●

படிப்பகம்

www.padippakam.com

புதிய மனிதன் எழுதுகிறது: ‘‘மொழிப்பற்று எனும் விஷயம் மரபில் இருக்கிறதே, அதனை எப்படி எதிர்கொள்வது?’’

மொழிவெறியோடு தேசிய இன மொழிகளை அடக்கி ஒடுக்கும் அரசின் இந்தித் திணிப்பிற்கெதிராக இப்போது இயக்கமெடுக்கிறோம்; வெளி மாநிலங்களிலும் மொழிவெறி தூண்டப்படும்போதெல்லாம் வெறியை தூண்டுபவர் யார்என்றும், மொழி—இனப்பற்று—வெறிக்குள்ள வேறுபாடுகளையும் திரைகிழித்துக் காட்டி வருகிறோம். புதிய கலாச்சாரம் மூலமாக.

புதிய மனிதன் எழுதுகிறது: ‘‘திராவிட இயக்கத்தைச் ‘சாதி வெறியர்கள்’ என்று முத்திரை குத்தி ஒதுக்கிவிட முடிவு செய்து விட்டீர்கள். அதனால் அவர்கள் வரலாற்றில் ஆற்றிய பங்கும், இன்றைய கலாச்சார அரங்கில் கணக்குத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகவும் அவர்கள் இருப்பதும் மாறிவிடப்போகிறதா என்ன?’’

திராவிட இயக்கம் இன்று சாதியமாகச் சீரழிந்து போய்விட்டதைப் பற்றி புதிய மனிதன் பேசவில்லை. நம்மிடம் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்வதுபோல எழுதுகிறார்கள். பெரியார் பண்பாட்டுக் கழகத்தோடு நாங்கள் நடத்திய விவாதத்தில் இந்த அடிப்படைகளைத் தெளிவாகக் காட்டியிருக்கிறோம். ‘பிராமணீய எதிர்ப்பு வேண்டாமா?’ என்று கேட்கிறார்கள். பார்பனீய எதிர்ப்புப் பிரச்சாரத்தை தெட்டத் தெளிவாக வைக்கிறது புதிய கலாச்சாரம். புதிய மனிதன் படித்துத் தெரிந்து கொள்ளட்டும். ‘சாதிய ஒடுக்கு முறை எதிர்ப்பு வேண்டாமா?’ என்று கேட்கிறார்கள். நிச்சயம் வேண்டும். அதுமட்டுமில்லை. சாதிக்கெதிராக, மதவெறிக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்து வருகிறது மகஇக. பார்த்துப் புரிந்து கொள்ளட்டும் புதிய மனிதன்.

இவைகளைச் செயல்படுத்தும் மகஇகவை, புதியகலாச்சாரத்தைப் பார்த்து ‘என்ன சொல்கிறீர்கள்?’ என்று புதிதாகக் கேட்டுப் பார்க்கிறார்கள். ‘‘பாட்டாளி வர்க்கத்துக்குப் புறம்பான நுகர்வாதம் போன்ற போக்குகளில் தொழிலாளர்களை ஆளும் வர்க்கம் முடக்குகிறதே, இவைபோன்ற போக்குகளுக்கு எதிராக, இப்படிப்பட்ட குறிப்பான கருத்தாக்கங்களை வளர்த்தெடுப்பது தொழிலாளர்களைப் போர்க்குணம் மிக்கவர்களாக, அரசியல் உணர்வுள்ளவர்களாக மாற்ற உதவும். வெறுமனே பாசிச கலாச்சாரம் பாரீர் என்று கட்டுரை எழுதுவது போதுமானதா?’’ என்று கேட்கிறது புதிய மனிதன்.

அடடா, என்ன ஆரவாரம்? எப்போது—ஜூன் 86ல். 1985 பிப்ரவரியிலேயே முதலில் இப்போக்கு தலைக்காட்டும் போதே ‘‘புது மோகம்! புதுவேகம்!’’ என்று அம்பலப்படுத்தி எழுதினோம். மே 86ல் தமிழகம் முழுவதும் ஐந்து நட்சத்திரக் கலாச்சாரத்தை எதிர்த்து மகஇக இயக்கம் எடுத்தது. மே 86 இதழில் சிறப்புக் கட்டுரை எழுதியது. எல்லாம் பார்த்த பிறகும் இப்படி எழுதுகிற புதிய மனிதனை என்ன சொல்ல? சுருங்கச் சொன்னால் அறிவு நாணயமில்லாதவர்கள்!

பாட்டாளி வர்க்க கலாச்சாரத்துக்கு யார் வளம் சேர்த்தாலும் பணியாற்றினாலும் மனம் திறந்து நாங்கள் வரவேற்கிறோம். இதைப் போய் புதிய மனிதனிடம் எதிர்பார்க்க முடியுமா? தொழிலாளி வர்க்கத்துக்குப் போர்க்குணம் ஊட்ட அவர்களுக்கு ஏஜென்சி கரன்சிப் பணம் இருக்கிறது; ‘அரசியல்உணர்வுள்ளவராக மாற்றுவது’ என்று ஏதோ சொன்னார்களே என்று பார்க்கிறீர்களா? அது வாய் தவறி வந்திருக்கும்; பெரிதுபடுத்த வேண்டாம். கட்சி சாராத த. ம. முவா, அதன் ‘தோழமை’ புதிய மனிதன் ஏடா, மார்க்சிய—லெனினியத்தை வழிகாட்டும் கோட்பாடாக ஏற்றுக் கொள்வதை வெளிப்படையாகச் சொல்லக்கூடத் துணிச்சலற்றவர்களா அரசியல் உணர்வு பற்றிக் கவலைப்படுகிறார்கள்? வேண்டாம் வேண்டாம் வீண் கற்பனைகள்.

சற்றே ஒரு கணம் நின்று சீர்தூக்கிப் பாருங்கள். நிலைப்பாடுகளையே சொல்லாமல் மார்க்சிய லெனினிய மேற்கோள்களை மிகக் கேடாகப் பிய்த்துப் போட்டு நம் முன் வைக்கிறார்களே இவர்களை என்ன சொல்ல? அந்த மா-லெ கோட்பாடுகளை மண்ணுக்கேற்ப இங்கே எப்படி கலாச்சாரத்துக்குப் பிரயோகிக்கிறார்களாம்? என்ன என்ன முடிவுகள், நிலைப்பாடுகள்? ஒன்றும் சொல்லவில்லை **புதிய மனிதன்.**

மாறாக எம்மைப் பார்த்துவேகமாகவேசொல்கிறது **புதியமனிதன்**— ‘‘எளிய சூத்திரங்களிலிருந்து எளிய முடிவுகளுக்குநாம் வருகிறோமாம்’’ அப்படி வரவேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நன்றாக ஆய்ந்து தான் ஏஜென்சி கும்பலோடு சேர்ந்துகொண்டு த.ம.மு துரோகம் செய்தது என்கிறோம். அரசியல் ரீதியான வரையறையை நன்றாக வே செமித்துச் சீரணித்திருக்கிறோம். **புதிய மனிதன்** போன்ற கும்பலால் கேலிப் பொருளாக்கப்பட்டு வரும் மார்க்சிய—லெனினிய—மாவோ சிந்தனை என்ற அரசியல் விளக்கு எமக்கு வழிகாட்டும் தத்துவமே. குழிகளிலும், இருட்டறைகளிலும் விழாமல் இருக்க உதவுவது அதுவே.

**மீண்டும் சொல்கிறோம்!**

பாட்டாளி வர்க்க சித்தாந்தம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் அதிகமான நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவக் கலாச்சாரத்தின் வளர்ச்சியில் மதிப்புடைய அனைத்தையும் தன் வயப்படுத்தி உருவம் கொடுக்கவே விரும்புகிறது; பாட்டாளிவர்க்க அரசியல் நடைமுறை அனுபவத்தினால் எழுச்சி பெற்று இந்த அடிப்படையில், இந்த திசைவழியிலான பணியைத்தான் உண்மையான பாட்டாளிவர்க்கக் கலாச்சாரத்தின் வளர்ச்சியாக அங்கீகரிக்க முடியும். இது எமது பாட்டாளி வர்க்க கலாச்சார வளர்ச்சிக்கு நாம் தரும் முக்கியத்துவத்தால் வருகிறது. இத்திசை வழியை வைப்பதுதான் புதிய மனிதன் உள்ளிட்ட சமரச வாதிகளுக்கு எரிச்சலைத் தருகிறது. ●

## போலிக் கம்யூனிஸ்டுகளின் (CPI) ரவுடித்தனம்!

தஞ்சை மாவட்ட புரட்சிப் பண்பாட்டு இயக்க (பு. ப. இ) செயலாளர் தோழர் திருமேனி வலது கம்யூனிஸ்டு (சி. பி. ஐ) அராஜகவாதிகளால் அடிக்கப்பட்டார். பாப்பா நாட்டில் 8-11-86 இரவு கடைத் தெருவில் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த தோழரைத் தனியே அழைத்துச் சென்று விசாரிப்பது போலச்செய்து ஏழு ரவுடிகளைச் சுற்றிலும் வைத்துத் தாக்கினார்கள்.

சி. ஐ. பி. நடத்தும் புத்தக நிறுவனம் என்.சி.பி.எச். இதன் டைரக்டர்கள் சென்னை அம்பத்தூரில் சொகுசு மருத்துவமனை கட்ட ‘சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க உதவி நிறுவனம்’ என்ற அமெரிக்க தன்னார்வக் குழுவிடமிருந்து கிட்டத்தட்ட ரூ 44 லட்சம் எச்சில்காசு வாங்கியுள்ளனர். இதனை அம்பலப்படுத்தித்தான் பு. ப. இ. பாப்பா நாட்டில் சுவரொட்டி இயக்கம் நடத்தியது. விளைவு: சி. பி. ஐ. ரவுடித்தனம்.

புரட்சி இயக்கத்தைப் பார்த்து அமெரிக்கக் கைக்கூலி என்று அவதூறு சொன்னவர்கள் நிரூபித்ததே கிடையாது. இப்போது தாங்களே அமெரிக்கக் கூலிகளாக அம்பலப்பட்டு நிற்கிறார்கள்.

● போலிகளே, உங்களின் எச்சில் பிழைப்பை ரெளடித்தனத்தால் மூடி மறைத்துவிட முடியாது!

● புரட்சி அரசியலுக்கு விழையும் மக்களே, போலிகளைப் புறக்கணியுங்கள்! புரட்சிகர இயக்கங்களில் அணி திரளுங்கள்! ●

படிப்பகம்

www.padippakam.com



# பெண் என்றால் கருவிலேயே கொல்லுகிறார்கள்

ஐந்து மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை நேரம். பத்திரிக்கைகள் பரபரப்பாக விற்றன. "ஆஸ்பத்திரியிலிருந்து ஓர் ஆண் குழந்தையைக் காணோம்!"—கொட்டை எழுத்துக்களில் விளம்பரங்கள் அலறின. பிறந்து இரண்டே நாட்களான ஆண் குழந்தை ஒன்று — சிறு நீரகக் கோளாறு என்று ஆஸ்பத்திரியில் அனுமதித்திருந்தார்கள் — இப்போது காணோம்!

ஆஸ்பத்திரி ஆயாமீது சந்தேகப்பட்டார்கள். அது நிருபிக்கப்பட்டது. "ஆண் குழந்தை கொண்டு வராமல் வீட்டுக்குவராதே!" என்று அவள்கொழுந்தன் கட்டளை போட்டானாம். ஒரு மாதத்துக்கு முன்னால் அவள் தங்கை ஆண் மகவைப் பெற்றாள்; அப்போதே உடல் சுகமில்லாமல் செத்து விட்டது. அதனால்தான் கொழுந்தன் மிரட்டியிருக்கிறான். அக்காளின் வாழ்வுக்காக தங்கை கொடிய திருட்டையே செய்யத் துணிந்தாள்.

இப்படி ஒருவரல்ல, ஆயிரக் கணக்கான பெண்கள் இந்தியாவெங்கும் நாட்டுப்புறத்திலும், நகர்ப் புறத்திலும் பயமுறுத்தப்படுகிறார்கள்; "ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றுக் கொடுக்க வக்கற்ற சாக்கடை வயிறே!" என்று ஏசப்படுகிறார்கள்; ஈவிரக்கமேயில்லாமல் கொலைகள்கூடச் செய்யப்படுகிறார்கள்.

குழந்தை பெறாததற்குக் காரணம் தன் மகனா, மருமகளா என்றுநிருபிக்கக்கூட முடியாத நிலையில், முதலாமவள் இருக்கும் போதே இரண்டாவதாக ஒரு பெண்ணை அதிக வரதட்சணைக்குப் பெறத் துடிக்கிறாள் ஒரு மாமியார்க்காரி. இவர்களது கருத்துக்களுக்கு அடி எடுத்துக் கொடுத்த 'கடவுளின் வாக்கு' என்று சொல்லப்படும் அதர்வண வேதமும் இதையே ஆதியில் சொன்னது: "பெண் குழந்தை வேறெங்காவது பிறக்கட்டும்; இங்கே ஓர் ஆண் மகவை அருள்வாயாக!"

பிறந்த பிறகு மட்டுமல்ல, பிறப்பதற்கு முன்பே கருவிலேயே ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்து பெண் என்றால் அது வளருவதற்குள் அபார்ஷன் செய்து அழித்து விடுவது இப்போது நடக்கத் தொடங்கி விட்டது. இது 'நாகரீகமான' முறையிலே பிற்போக்காளர்கள் தொடர்ந்து நடத்தும்நரபலிகள்:

இந்த முறைக்கு உயிரியல் பெயர் அம்னியோசெண்டசிஸ் (பார்க்க: பெட்டிச் செய்தி) ஒரு சில நேர்மையான உள்ளம் கொண்ட மருத்துவர்கள் தவிர ஆயிரக் கணக்கான மருத்துவர்களும், மருத்துவ நிறுவனங்களும் புதிய பிழைப்பிலே புகுந்து விட்டார்கள்.

அமெரிக்காவில் படித்துத் திரும்பிய மருத்துவர்கள் புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு வந்தார்கள். "உங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்றறிய வேண்டுமா? இங்கே மேல் நாட்டில் செய்வது போல முதல் தரமாகச் சோதிக்கப்படும்!" இங்கே உள்ள மூட நம்பிக்கையும் ஃபாரின் (அந்நிய) மோகமும்—இவர்களுக்குப் பிழைப்புக்கான வழி.

"இப்போது ரூ 80 செலவழித்தால் போதும்; பின்னால் ரூ 8000 சேமிக்கலாம்" என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அதாவது அபார்ஷனுக்கு ரூ80 தான்; பெண் கருவைக் கலைத்து விட்டால், பெரிதாக வளர்ந்து வரதட்சணைக்காக ரூ 8000 செலவழிக்க வேண்டாமாம். முன்பு ரூ 500, ரூ 1000 என்றிருந்த கட்டணம் ரூ 200 ஆகக் குறைந்ததும், உழைக்கும் மக்களிடமும் இந்தச் சோதனைகளை நுழைத்து விட்டார்கள்.

பிழைப்புக் காரர்கள் அடுக்கடுக்காகக் காரணங்களைச் சொல்லி இந்தக் கொலைகளை நியாயப்படுத்துகிறார்கள்.

— தனக்கொரு மகன் பிறக்கும் வரை பிள்ளைகளைப் பெற்றுப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டாமல்லவா?

— ஒரு பெண் பிறப்பதைத் தடுப்பது சரிதானே? அலட்சியத்திலும் அடக்கு முறையிலும் அவள்வளர வேண்டாமில்லையா?

— மக்கள் தொகையில் பெண்கள் குறைந்தால் என்ன? அப்போது அவள் மதிப்பு தன்னால் உயர்ந்து போகும். பெண்கள்கிடைப்பதுஅரிதாகிப் போவதால் ஆண் வரதட்சணை கொடுக்க வேண்டி வரும்.

இவை என்ன வாதங்களா? கிறுக்குப் பிடித்தவனின் உளறல்கள். இவர்கள் முட்டுக் கொடுத்து நிறுத்துகிற

படிப்பகம்

www.padippakam.com

நியதிகள் அழுகி நாறும் இன்றைய சமூக நியதிகள். 'ஆணே ஆதிக்க அதிபதி; பெண் விசுவாசமான அடிமை; சேவை செய்யப் பிறந்தவள்'— இதுதானே நிலப் பிரபுத்துவ நியதி?

ஈவிரக்கமில்லாமல் பெண்களை நடத்துமிந்தக் கொடியவர்கள் பெண்களின் உடம்புகளை என்ன வென்றுதான் எண்ணியிருக்கிறார்கள்? பெண் என்ன பரிசோதனைக் கூடமா? அவள் உடல் என்ன ஆவது? மனவேதனை எத்தனை?

அம்னியோ சென்டசிஸ் சோதனையால் வரும் கேடுகளின் பட்டியலைப் பாருங்கள்:

● கரு முழுமையாக வளராமல் குறைப் பிரசவமாகும்;

● ஊசியைக் குத்தி 'தாய் நீரை' எடுப்பதால், குழந்தைமீது ஆறாத கீறல்கள் விழும்;

● இடுப்புப் பட்டை இறங்கிப்போகும்; மூச்சிறைப்பு வரும்;

● மருத்துவ மனையில் நாலாம்தரமான சுத்தம் சுகாதாரம் இருப்பதால் கர்ப்பப்பைத் தடத்தில் எளிதில் தொற்று நோய்கள் தாக்கும்.

● இப்படிப்பட்ட அபார்ஷனுக்குப் பிறகு மறுபடி கருத்தரிக்காமல் போனால் அப் பெண்ணுக்கு மயக்கம் வருவது நிரந்தரமாகிவிடும்

● இந்தப் பரிசோதனைகள் பற்றி ஒன்றுமே யறியாமல் கணவன்/மாமியார்/கொழுந்தியாள்/கொழுந்தன் பலவந்தங்களால் செய்து கொண்டு விடுகிறாள். ஆனால் பெண் கருவை அழித்த பிறகு பெண்பாலுக்கு எதிராக இப்படிச் செய்து விட்டோமே என்ற குற்ற உணர்வினால் வாழ்வில் நீண்ட நாள் அவதிப்படுகிறாள்.

அவர்கள் நியாயமாகவே கேட்கிறார்கள் "இதில் நாங்கள் படும் கஷ்டம் ஆண்களுக்கு என்ன தெரியும்?" ஆம், பொறுப்பற்ற, நிலப்பிரபுத்துவ ஆண் ஆதிக்கக் காரர்களுக்கு எதுவும் தெரியாதுதான்.

வேறு யார் பொறுப்பாக இவர்களுக்காக வாதாடுவார்களாம்? அரசாங்கம் என்ன சொல்கிறது? "மக்கள் தொகை பெருகுவதைத் தடுக்கலாம்" என்கிறது. மக்கள் தொகைப் பிரச்சனை முதல் பிரச்சினையா? பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், குடியிருப்பு இல்லாமை, சுகாதாரக் கேடுகள், மருத்துவ வசதி இல்லாமை ஆகிய தேவைகளில் தான் பிரச்சனையே உள்ளது. இதைத் தீர்க்க வக்கற்ற சுரண்டும் அரசு வேறென்ன சொல்லும்?

பெண்ணைக் கருவிலே கொன்றுவிடும் அம்னியோ சென்டசிஸ்—அபார்ஷன் கொடுமை ஒருபுறம். சமூகத்தில் பெண்ணடிமையை வைத்துள்ளதால் நடக்கும் பெண்குழந்தைக் கொலைகள் இன்னொரு பக்கம்.

மதுரை உசிலம்பட்டியில், தேனி வட்டாரத்து கோட்டூர் கிராமத்தில் இது சாதாரண நிகழ்ச்சியாக நடக்கிறது. அரளிக் கொட்டையை அரைத்துக் கொடுத்துப் பெண் குழந்தை பிறந்தவுடனேயே கொன்று விடுவார்கள். "இடுப்பு வலிக்கிற நேரம் சங்குல நல்லெண்ணெய் எடுத்துட்டு ஓடைப்பக்கம் போயி அங்கனயே புள்ளயப் பெத்து எருக்கம்பாலப் புடிச்சுக் குடுத்துட்டு வீட்டுக்குத் திரும்பின தாய்மார்களும் இருக்காங்க" என்றுகிராமத்து மக்களே அறிக்கை படிக்கிறார்கள்.

சமூகம் சமூகமாகவே இக்கொலைகளை நடத்துவதன் பொருள் என்ன? பட்டினி, திருமணம்—சடங்கு—செலவுகளுக்கு ஈடுகொடுக்க முடியாத தட்டுப்பாடு தவிர, வாழ்க்கையில் நிரம்பி வழியும் ஆண் ஆதிக்க வரதட்சணை, மூட நம்பிக்கைகள். அவர்களே சொல்வதைக் கேளுங்கள்:

பெத்த பெண்பிள்ளையைக் கொல்லத் துணிகிற அளவுக்குப் பெண்களின் மனது இறுகிய பாறாங்கல்லாகியது அவளது உறுதியால் அல்ல, அடிமை வாழ்வின் பழக்கத்தால்.

பெண்ணடிமையை உடைத்தெறியும் ஜனநாயக பூர்வமான சமுதாயத்தை நாம் முன்னே வைத்து விடிவாகப் பேசினால், அடிமை எசமான்கள் மூர்க்கமாகத் தாக்கிப் பேசுகிறார்கள். தத்தா என். பாய் என்ற மருத்துவனின் உளறல் இதோ: "பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாக வரும் மரபுச் சிந்தனையை எப்படி நீங்கள் ஒதுக்கித் தள்ளலாம்—சும்மா ஆண்—பெண் சமத்துவம் பேசினால் போதுமா?..."

வாழையடி வாழையாக இருந்தால் அடிமை வாழ்வு நல்ல வாழ்வாகி விடுமா? மோகத்துக்கு என்று சொன்னால் சின்னவீடு, பெரிய வீடு எல்லாம் தேவை என்று பேசி 'அடிமை நான் தினமும் ஓதும் வேதம் நீ புதிய ராகம் நீ' என்று பாடும் அதே ஆசாமிகள் பெண்ணைப் பேதையாகவே வாழ வைத்துப் பிரச்சனை வரும்போதெல்லாம் 'அழிவதெல்லாம் பெண்ணாலே!' என்று ஒரேயடியாக 'நச்' சென்று அடித்து விடுகிறார்கள்.

அம்னியோ சென்டசிஸை ஆதரித்து ஏன் வெறியோடு வாதிடுகிறார்கள்? பழமை வெறி இங்கே சாகவில்லை—அதுவே அடிப்படைக் காரணம்.

அம்னியோ சென்டசிஸ் என்ற அறிவியல் செயல் முறையை நாம் எதிர்க்கவில்லை; பிற்போக்கு நடைமுறைக்கு ஓர் ஆயுதமாக அதைத் தூக்குவதையே நாம் எதிர்க்கிறோம். உரிமையோடு ஒரு குழந்தை பிறப்பதில் தேர்ந்தெடுக்கவோ, கட்டுப்படுத்தவோ இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்த அருவெறுப்பான, அபாயகரமான வழியை நாம் எதிர்க்கிறோம். சமுதாய அறுவைச் சிகிச்சை இல்லாமல் இதை முற்றாகத் தூக்கி எறியவும் முடியாது. அதுவரை பிறக்கவிருக்கும் பெண் குழந்தைகளின் அலறல்கள் ஊமை அலறல்களாகவே தொடர்வதைப் பார்த்துக் கொண்டு குருடர்களாக நாம் வாழ முடியாது, வாழக் கூடாது.

★ **வேலாயுதம்**

## அம்னியோ சென்டசிஸ் என்பது....

தாயின் கருப்பையில் வளரும் குழந்தை ஆணா, பெண்ணா என்று நன்கு வளரும் முன்பே கண்டு பிடித்துச் சொல்லும் மருத்துவ சோதனையே அம்னியோ சென்டசிஸ். 1970ஆம் ஆண்டுகளில் அறிவியலின் கண்டுபிடிப்பு இது.

கர்ப்ப காலத்தின் இரண்டாம் கட்டத்தில் அல்லது 15, 16—வது வார காலத்தில் 15 சிசி அளவு 'தாய் நீர்' வயிற்றுப் பாகத்தில் பெருத்த ஊசியால் குத்தி எடுக்கப்படும். இந்த நீரிலிருந்து கர்ப்பச் செல்கள் பிரிக்கப்பட்டு நான்கைந்து வாரம் செவ்வு முறையில் வளர்க்கப்படும். கணிசமான அளவு கிடைத்ததும் குரோமோசோம் (உயிரணு) ஆய்வு நடத்தப்பட்டு வளர்வது ஆணா, பெண்ணா என்பது முடிவு கட்டப்படும்.

ஆரம்பத்தில் குரோமோசோம் குறைபாடுகள் எதுவும் இருக்கிறதா என்று கண்டறிவதற்காக இந்தச் சோதனை நடத்தப்பட்டது. இது தவிர 75 விதமான பேறு கால நோய்கள் பற்றி ஆராயப் பட்டது. குறைபாடுகள் கொண்ட கருவைக் கலைத்துக் கொள்ள அமெரிக்க மருத்துவர்கள் ஆலோசனைவழங்கினார்கள். ஆனால் இக்கண்டுபிடிப்பு மெள்ள மெள்ளக் கேடாகப் பயன்படுத்தப்பட்டது. 'விரும்பத் தகாதது பெண்; பெண் கருவா, அதைக் கொன்று விடுங்கள்' என்று அபார்ஷன்களைச் செய்யக் கோரினார்கள் சில வஞ்சக நரிகள்.

www.padippakam.com

**மேரிடெய்லர்–**

இங்கிலாந்திலே பிறந்து, இந்திய நக்சல்பாரி ஆதரவாளர் அமலேந்துவைக் காதலித்து மணந்து, இந்தியப் புரட்சியை ஆதரித்து வாழ்ந்தார். அதனால் 'புரட்சியை விதைத்த நக்சல்பாரி' என்றும், 'அந்நிய உளவாளி' என்றும் இந்திய அரசால்அவதூறுப் பட்டங்கள் சூட்டப்பட்டு 1970-ல் கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறை வாழ்வில் தான்பட்ட துயரங்கள், புரட்சியாளர்கள் பட்ட கொடுமைகள், போலீஸின் கொடுங்கரத்தால் உள்ளே தள்ளப்பட்ட அப்பாவிக் கைதிகளின் வாழ்க்கை, வெளியே உள்ள ஜாதி—மத வேறுபாடுகள், கொடுமைகள் உள்ளேயும் போடும் ஆட்டங்கள், சிறை அதிகாரிகளின் கொடுமைகள், அவர்களது லஞ்ச ஊழல் லாவணியங்கள் அத்தனையும் கண்முன்னே நடப்பது போல சித்தரிக்கப் படுகின்ற நூல் 'இந்தியச் சிறை ஒன்றிலே எனது சில ஆண்டுகள்.' மேரிடெய்லரின் இந்நூல் தமிழிலே முதன் முறையாக முழுமையாக வெளி வருகிறது.

இனி, தொடர்ந்து படியுங்கள்...

விசாரணை தொடங்கப் போகிறது என்று நான் உண்மையாகவே நம்பினேன்; எனவே இப்படிக் காலதாமதம் ஆவதாலும், பொய்யான வதந்திகளாலும் பெரிதும் எரிச்சலும் கோபமும் அடைந்தேன். அக்டோபர் 3ஆம் தேதிக்கு, இன்னும் ஐந்து வாரங்கள் இருக்கின்றன. அதுவரை காத்திருப்பதே மிகவும் சலிப்பூட்டுகிற ஒன்றாகும். இது போதாதென்று, மீண்டும் மீண்டும் அங்குமிங்கும் அலைக்கழிக்கத் தொடங்கினார்கள். பீகார் மாநிலம் முழுவதும், தொடர்ந்து கலவரங்கள் நடந்து கொண்டிருந்ததால் நக்சல் பாரிகளை அடைத்து வைத்திருக்கும் சிறைப் பகுதியைச் சுற்றி, வழக்கமான கூடாரம் போடுவதற்கு, ராணுவப் போலீசார் போதவில்லை; எனவே 'சிறைப் பாதுகாப்பு' என்னும் பேரில், என்னை மீண்டும் ஹசாரி பாக்கிற்கே திருப்பி அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டது.

மறுபடியும் இரண்டு சாக்குப்பை நிறைய புத்தகங்களை அள்ளிக் கொண்டு போலீசு வேனில் ஏற வேண்டும். ஹசாரி பாக்வரை வழி முழுக்க போலீசு வேன் தூக்கித் தூக்கிப் போடும் குலுக்கலை எண்ணிப் பார்த்தேன்; அந்தத் துன்பத்தை விட, திருப்பி அனுப்புவதை எதிர்ப்பதால் ஏற்படும் துன்பம் குறைவாகவே இருக்குமென்று எண்ணினேன். 'திரும்பிப் போவதில்லை' என்று மனதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

அன்று காலையில் நாங்கள் மீண்டும் ஹசாரிபாக்கிற்கு மாறிச் செல்ல வேண்டும். ஆனால் நான் காவல் பெண்ணிடம் ஒரு பொய் கூறினேன். 'எனக்கு வயிற்றுக் கழிச்சல்; அதனால் வயிற்று வலி; எனவே என்னால் எழுந்திருக்கக் கூட முடியாது' என்றேன். சிறை டாக்டரும் வேறு வழியின்றி நான் நோயாளி என்று சான்றிதழ் அளித்தார்—இவ்வாறு, என்னுடன் வந்த சக கைதிகள், மீண்டும் ஹசாரி பாக்கிற்குத் திருப்பி அனுப்பப்படும் போது, நான் மட்டும் ஜாம்செட்பூரிலேயே தங்கினேன். பினாவுடன் நாட்களைக் கழிப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தேன். நான் இல்லாத இந்தப் பத்து மாதங்களில், விடா முயற்சியுடன் செயலாற்றி இருக்கிறாள். தனது படிப்பில் மிகவும் வளர்ச்சி பெற்றிருந்தாள். இப்பொழுது அவளால் திக்காமல் கொள்ளாமல் மிகவும் இயல்பாக எதையும் படிக்க முடிந்தது.

**அரசு வழக்கறிஞர்—ஓர் அரசு விசுவாசி**

இதற்கெனத் தனியாக அமர்த்தப்பட்ட அரசாங்க வழக்கறிஞர் ஒருவர் எங்கள் வழக்கை நடத்துவதற்கு பாட்னாவிலிருந்து அனுப்பப்பட்டிருந்தார். அவர் 'உண்மையைக் கண்டுபிடிப்பதில்' பெரும் புகழ் பெற்றவராம். அவர் இப்போது எங்கள் வழக்கை சிறைக்குள்ளேயே விசாரிக்க வேண்டும் என்று பாட்னாவிலுள்ள அதிகாரிகளை இசைய வைக்கப் பெரும் முயற்சி செய்கிறார் என்று எங்கள் மேல் இரக்கமுள்ள ஒரு வார்டர் மூலம் அறிந்தேன். இவருடைய இந்த முயற்சியின்படியேவிசாரணை நடக்குமென்று எதிர்பார்த்தேன். மின் விசிறிகள் எல்லாம், எங்களை முன்பு விசாரித்த அந்த வழக்கு மன்ற அறையில் மீண்டும் பொருத்தப்பட்டன. எல்லா வழக்குகளையும் ஒன்றிணைத்து நடத்தஆணையிட்ட நீதிபதி ஆணையையும் திருப்பிப் பெற்றுக் கொள்ள வைக்க அவர் பெரும் முயற்சி செய்தார். முடிந்த அளவுக்குத் தனித்தனி விசாரணை நடத்தப் பெரும்பாடு பட்டார். எந்த அளவுக்கு இது நீடிக்கிறதோ, அந்த அளவுக்கு இறுதியில் இவருக்கும் பெரிதும் 'லாபமாக' அமையுமென்று எண்ணினார். மேலும்பலசதித் திட்டத்திற்கு ஆளாக வேண்டியதிருக்கும்; அதற்கெல்லாம் தயாராகும் படியும் அந்தக் காவலர் கூறினார்.

இதற்கென்று போடப்பட்டுள்ள இந்த அரசாங்க வழக்கறிஞர், நீதிபதியை அளவுக்கு மீறி நச்சரித்துக் குழப்பினார். சிறைக்குள்ளேயே வழக்கு நடத்த வேண்டும்; இல்லையென்றால் தனக்கு அரசாங்கம் அளிக்க முன் வந்துள்ள பயணப் படியை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று நிபந்தனை விதித்தார். இந்த வழக்கறிஞர், உள்ளூரிலுள்ள சில மதிப்பு வாய்ந்த உயர்பதவியாளர்களிடம், எங்களை எப்படியும் குற்றவாளிகள் என்று நிரூபித்து விட்டால், விருந்தளிப்பதாக வாக்களித்துள்ளார் என்று சிலர்என்னிடம் கூறினார்கள்.

**ஆயிரமாயிரம் அரசியல் கைதிகள்**

வேறு சிலரும் இதில் வேலை செய்தனர். என்னுடைய நண்பர்களும், இந்த வழக்கில் முயற்சி செய்து பெருங்கவனம் செலுத்தினர். இந்த முயற்சிகளானது பத்திரிக்கையின் ஆர்வத்தைத் தூண்டி விட்டன. அதனால் விசாரணையைக் கேட்பதற்குப் பத்திரிக்கை ஆசிரியர்கள் ஜாம்செட்பூருக்கு வந்து சேர்ந்தனர். மேலும் அந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் அம்னெஸ்டி இண்டர் நேஷனல் (சர்வதேச பொது மன்னிப்புக் கழகம்) மேற்கு வங்கத்துச் சிறையிலுள்ள அரசியல் கைதிகளின் நிலையைப் பற்றி ஒரு விரிவான செய்தியை வெளியிட்டது. 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் வரை இந்த ஒரு மாநிலத்தில் மட்டுமே அரசியல் கைதிகளாக அடைபட்டுக் கிடக்கிறார்கள் என்று எழுதியது.

இந்திய அரசாங்கம் இந்த எல்லாவிதமான குற்றச் சாட்டுகளையும் மறுத்து வாதிட்டாலும், முதன் முதலாக இந்தப் பத்திரிக்கை வெளியிட்ட செய்தியானது உலகத்

36

**இந்திய சிறை ஒன்றிலே எனது சில ஆண்டுகள்**



படிப்பகம்

www.padippakam.com

தின் கவனத்தையே, இந்தியாவிலுள்ள அரசியல் கைதிகளின் நெருக்கடி நிலையை நோக்கித் திரும்பியது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

ஆகஸ்டு 28—இல் நடந்தது போலவே அக்டோபர் 3ஆம் தேதியும் நடந்தது. நான் அக்டோபர் 3 ஆம் தேதி வந்தவுடன் நீதிமன்றம் செல்லத் தயாரானேன். இந்தத் தடவையும் அதே ஆங்கிலேய அதிகாரிதான் வந்து எனக்குச் செய்தியைத் தெரிவித்தார். அதாவது போலீசு கண்காணிப்பாளரே (எஸ்.பி) என்னை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும்போது அளிக்க வேண்டிய போதிய பாதுகாப்புப் பணியை அளிக்க இயலாது என்று அறிவித்திருக்கிறார். காரணம், பீகாரில் நடக்க இருக்கும் 3 நாள் பொது வேலை நிறுத்தத்தைச் சமாளிப்பதற்கு எல்லா போலீசாரையும் அணி அணியாய்க் குவித்துள்ளார்கள். சாதாரணமான நிலைமையில்லாத இந்தச் சூழலைச் சுட்டிக்காட்டி, அந்த அரசாங்க வக்கீல் நீதிபதியிடம் விசாரணையை இன்னும் நீண்ட நாளைக்குத் தள்ளிப் போட வேண்டினார்.

ஆனால் நீதிபதியோ, நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து, பீகாரில் நிலைமை எப்படியிருந்தாலும், ஜாம்செட்பூரின் நிலைமை முழுக்க முழுக்க சாதாரண நிலையில் இருக்கிறது. எனவே எங்களைத் தவறாமல் அக்டோபர் 7 ஆம் தேதி திங்கட் கிழமை நீதிமன்றத்திற்கு வரும்படி ஆணையிட்டார்.

**“நக்சல்பாரிகளுக்கு நீதிபதி ஆதரவளிப்பதா?”**

அவர் சொன்னபடி, திங்கட் கிழமை 22 பேருக்காக தயாரிக்கப்பட்ட ஒரு போலீசு வேனில், நாங்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டோம். வேனில் மொத்தம் 30 பேர் இருந்தோம். நாங்கள் ஆறு பேர்; ஆனால் எங்களைக் காவல் காத்த ஆயுதம் ஏந்திய போலீசாரோ ஒரு டஜன். நீதிமன்றத்திற்கு வெளியே காலை 10 மணியிலிருந்து நண்பகல் 2.30 மணி வரை உள்ளே செல்லக் காத்துக் கிடந்தோம்.





**மேரிடெய்லர்**

தாங்க முடியாத வெப்பமும் புழுக்கமும் வாட்டி எடுத்தது. கிட்டத்தட்ட உச்சி வெயில் அடிக்கும் நேரத்தில் எங்கள் வழக்கறிஞர் வந்தார். அந்த அரசாங்க வக்கீல் மற்றுமொரு ‘மனு’ கொடுத்துள்ளார் என்ற செய்தியைத் தெரிவித்தார். இந்தத் தடவை தன் மனுவில், இந்த நீதிபதியின் மேல் தனக்கு நம்பிக்கையில்லை என்றும், நக்சல்பாரிகளுக்குச் சாதகமாக அவர் நடக்கிறார் என்றும் அறிவித்து, இந்த விசாரணை முழுவதையும் மற்றொரு நீதிமன்றத்துக்கு மாற்றும்படி மாவட்ட நீதிபதிக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். தன்னுடைய இந்த அறிக்கைக்கான காரணங்களையும் கொடுத்திருந்தார்— “இந்த நீதிபதி, ஒரு தாய், தன் வயது வந்த மகன் நீதிமன்றத்திற்கு வரும்போது, பேசுவதற்கும் அவனுக்கு உணவு அளிப்பதற்கும் அவர் அனுமதி அளித்திருக்கிறார்; மேலும் சிறைக்குள்ளேயே விசாரணை நடத்துவதை மறுத்திருக்கிறார்; வக்கீல் அமர்த்திக் கொள்ளாத இரண்டு கைதிகளுக்கு, சட்ட உதவியாளரை வைத்துக் கொள்ள அனுமதி அளித்திருக்கிறார். மேலும் பிரிட்டிஷ் உயர் ஆணைக் குழுவிலுள்ள அதிகாரி ஒருவரை அவருடைய அலுவலக அறையிலேயே தனியாகச் சந்தித்திருக்கிறார்.

எனவே அந்த மனு பைசாவிலுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்து, அந்த நீதிபதியைப் பற்றி ஒரு முடிவு தெரிகின்ற வரை எங்கள் வழக்குகளை எல்லாம் தள்ளிப் போடப்பட வேண்டும்”. இதுவே அந்த மனுதாரராகிய அரசாங்க வக்கீலின் நோக்கம். அன்று மாலையில் கோர்ட்டு ஐந்தே நிமிடங்களுக்கு மட்டும் ஒரு சடங்கு போல விசாரணைக்காகக் கூடியது.

ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரி, நீதிபதியைத் தனியாக, சில முறையில்லா வழியில் சந்தித்தது, இயல்பாகவே பிரிட்டிஷ் அலுவலகத்தைப் பெரிதும் பாதித்தது. கல்கத்தாவிலிருந்து வந்த இந்த ராஜதந்திரி, இந்த வழக்கு முடிவதற்கு இன்னும் எவ்வளவு நாளாகும் என்றறிவதற்காக நீதிபதியின் அலுவலகத்திற்குச் சென்றிருக்கிறார். இவ்வளவிற்கும் இந்தச் சந்திப்பு முழுவதும் அந்த அரசாங்க வக்கீலின் உதவியாளர் முன்னிலையில்தான் நடந்திருக்கிறது. அரசாங்க வக்கீல் அதையும் தன் மனுவிலுள்ள வேண்டுகோளுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதானது, பிரிட்டிஷ் அலுவலகமானது எனக்காக எடுக்கும் முயற்சியை இன்னும் கூர்மையாக ஆழப்படுத்தும் என்று மனமாற நம்பினேன்.

**அரசாங்கப் பிரதிநிதிகள் குற்றவாளிக் கூண்டில்**

எங்கள் வழக்கு நடத்தும் நீதிபதி, இந்த மனுவிற்கு பதிலாக, மாவட்ட நீதிபதிக்கு அனுப்ப ஒரு அறிக்கையைத் தயார் செய்தார். தான் நக்சல்பாரிகளுக்குச் சலுகை காட்டுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்து வாதாடினார். சட்டப்படி, முழுமையான, ஒழுங்கான, நேர்மையான விசாரணை நடத்துவதற்கு மட்டுமே பெரிதும் தான் ஆர்வம் காட்டுவதாகக் குறிப்பிட்டார். அரசாங்க வழக்கறிஞரின் சூழ்ச்சியான திட்டத்தினால் தன்னுடைய நேர்மையான ஒவ்வொரு முயற்சிக்கும் முட்டுக்கட்டை போடப்பட்டது என்றும் குறிப்பிட்டார். ஒருபடி மேலே சென்று, எந்த நீதிபதி வழக்கை நடத்தினாலும், அதுபோலவே தாமதப்படுத்தும் தந்திரத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்; அந்தச் சிறப்புத் திறம் வாய்ந்த அரசாங்க வக்கீலின் ஆர்வமெல்லாம், எந்த அளவிற்கு இந்த வழக்கை நீடிக்க வைக்க முடியுமோ அந்த அளவிற்கு நீட்டிக் கொண்டு செல்வதுதான். அப்போதுதான் அவருக்கு இதன் மூலம் பெரிய வருமானத்தைச் சம்பாதிக்கும் யோசனையாக இருக்கும் என்றும் எழுதித் தன் அறிக்கையை முடித்திருந்தார். அரசாங்கம் நியமித்திருக்கும் அதன் நிர்வாகப் பிரதிநிதிக்கு எதிராக, ஒரு நீதிபதியால் இந்த அளவிற்குக் குற்றம் சாட்டப்படுவது, உண்மையிலேயே ஒரு அசாதாரண செயலாகும்.

(தொடரும்)

ஆசிரியர், வெளியிடுபவர்: வி. வல்லபேசன். 6, வடக்குவாசல். எஸ். எஸ். காலனி, மதுரை — 625016.
அச்சிடுவோர்: சத்யம் அச்சகம், 6, வடக்குவாசல், எஸ். எஸ். காலனி, மதுரை—625016.

படிப்பகம்

புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com



# அரண்மனைத் திருவிழா

● பச்சையப்பன்

அப்னா உத்சவ். கடந்த மாதம் டில்லி தர்பாரில் அரங்கேற்றப்பட்ட பிரம்மாண்டமான கலை விழா. நவம்பர் 8ந் தேதி முதல் இரவும் பகலும் 19 நாட்கள் தொடர்ந்து நடந்து முடிந்த இவ்விழாவிற்கு செலவான தொகை ரூபாய் 10 கோடி.

பத்தொன்பதே நாட்கள் நடந்த விழாவிற்கு இவ்வளவு பணம் செலவா? என்று ஆச்சரியத்தில் புருவத்தை உயர்த்தி விடாதீர்கள்; வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். 'தேசத் துரோகி' என்று ராஜீவ் உங்களுக்கு பட்டம் கட்டி விடுவார்.

நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் கட்டிக் காத்து கெட்டிபடுத்த செலவழிக்கப்பட்ட தொகை இது. ராஜீவும், அவருடைய, மந்திரி பிரதானிகளும், உற்றார், உறவினர்களும், இச்சிறு தொகையில்தான் அம்மாபெரும் விசயத்தை சாதிக்க முயன்று இருக்கிறார்கள். எனவே ஏன்? எதற்கு என்று கேள்வி கேட்காமல், இம்மாபெரும் விழா எப்படி நடந்து முடிந்தது என்பதை மட்டும் பார்ப்போம்.

அலகாபாத், உதய்பூர், சாந்தி நிகேதன், பாட்டியாலா, தஞ்சாவூர், திம்மபூர், நாக்பூர்—இத்தனை இடங்களில் இயங்கி வந்தகலாச்சார பிரிவுகள் டில்லியை நோக்கி பறந்து சென்றன. வெறும்கையுடன் அல்ல. நாட்டின் மூலை முடுக்களில் உள்ள கை தேர்ந்த 4000 கிராமிய கலைஞர்களுடன் டில்லி கலா நகரியை அடைந்தனர்.

இது என்ன 'கலா நகரி'கேள்விப் படாத ஊராக இருக்கிறதே? ஆராய்ந்து பார்த்ததில் கலைஞர்கள் தங்குவதற்காக உருவாக்கப் பட்ட புதிய நகரம் என்று புரிய வந்தது. 'ஏஷியாட்' நகரம் மாதிரி நவீன குடியிருப்புகளை கட்டி கிராமிய சூழ்நிலையை கலைஞர்களுக்கு மறக்க அடித்து விடுவார்களோ? பயந்து விடாதீர்கள். அப்படி ஏதும் நடக்கவில்லை. வெட்ட வெளியில் தார்ப்பாயால் மூடிய கூடாரங்களில்தான் கலைஞர்கள் காலத்தைத் தள்ளினர். போன சீக்கிரத்தில் 1021 பேர் நோயாளி ஆகிவிட்டனர்.

வெறும் காரத்தைத் தடவி, அரை குறையாக வெந்த சப்பாத்தி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட உணவு. இதற்கும் பல மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டும். உடலை நடுக்கும் கடுங்குளிர் வேறு சேர்ந்து கொண்டது. அஜீரணத்தால் வயிற்று வலி, குளிர், தொண்டை கமரல் தொந்திரவுகள், அவர்களை தொத்திக் கொண்டது. 5 டாக்டர்கள் இருந்த இடத்தில் அவசரமாக மேலும்10 டாக்டர்கள் வரவழைக்கப்பட்டனர். நிலைமை அவ்வளவு மோசம் அடைந்தது. இதைவிட கொடுமை அஜீரணத்தால் அவதிப்பட்டவர்களுக்குத் தேவையானபோது கழிப்பிடம் காலியில்லை. அங்கும் நீண்ட வரிசையில்பலபேர் காத்திருந்தனர். காலைக் கடனை எல்லாம் முடித்து விட்டு காலை சாப்பாட்டிற்கு அவர்கள் வழக்கமாக போக 11-30 மணி ஆகிவிடும். கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள், அவர்கள் அனுபவித்த நரக வேதனையை. 10 கோடி ரூபாய் செலவு செய்தவர்கள், கலைஞர்களுக்கு முறையான குடியிருப்பு கழிப்பிட, குளியல் வசதிகளைக்கூட செய்து தரவில்லை. பெரும்பாலான கலைஞர்கள் கடுங்குளிரிலும் வெறும் தரையில்தான் படுத்துக் கிடந்தனர். இதைப் பற்றி அவர்கள் நிர்வாக அதிகாரி சீமா விடம் புகார் செய்த போது "இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் கலைஞர்கள் வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. டில்லியில் வாடகைக்கு கட்டில்கள் கிடைப்பது சிரமமாக இருக்கிறது" என்றார்.

எவ்வளவு அயோக்கியத்தனமான பதில். மூலை முடுக்கெல்லாம் சென்று கிராமியக் கலைஞர்கல ஆசை காட்டி இழுத்து வந்து, சாகடிப்பதுடன், கூப்பிடாமல் அவர்களே வலிய வந்து விட்டதா‌ கிண்டல் வேறு. வழி தெரியாமல், அலைந்து திரிந்து நேரம் கடந்து வந்தகிராம கலைஞர்களை எல்லாம் "அத்தாட்சி சான்றிதழ் இல்லை" என்று காரணம் கூறி நிர்கதியாய் விட்டனர் அதிகாரிகள்.

உண்மையில் நடந்ததோவேறு விழா ஆரம்பிப்பதற்கு மூன்று நா‌ முன்பு வரை வட்டார அதிகா‌ களுக்குகூட தெரியாது, இவர்கள் இம்மாதிரியான அத்தாட்சி சான்றிதழ்கள் கேட்பார்கள் என்று. நேர‌ இருந்தவர்கள், முதலில் வந்தவர்கள், அவசர, அவசரமாக கடை‌ நேரத்தில் தங்கள் அதிகாரிகளிடம் இந்த அத்தாட்சி அட்டையை வாங்கியிருக்கிறார்கள். விபரம் தெரியாதவர்கள், ரயில் நிலையத்தில் கேட்பாரற்று கிடந்தனர். அதிகாரிகள் மட்டும் அத்தாட்சி

## அப்னா உத்சவ் அவதரித்த கதை!

"ஆகஸ்ட் 23 ஆம் தேதி காலை 11மணிக்கு பாராளுமன்ற வளாகத்தில் இருக்கவும். அவசரமாக கூட வேண்டியிருக்கிறது" — டி.பி. சின்கா, இயக்குனர், கலாச்சார விவகார துறை", நாட்டில் உள்ள ஏழு கலாச்சார பிரிவு அதிகாரிகளுக்கும், ஆகஸ்ட் 21ந்தேதி இப்படி ஒரு செய்தி வந்தது இடையில் ஒரே நாள் இருப்பதால் அதிகாரிகள் அவசர கதியில் அலறி அடித்துக் கொண்டு ஓடினார்கள்.

கலாச்சாரத்துறை இயக்குனர் அலுவலகத்துக்கு ராஜீவும் வந்து சேர்ந்தார். தேசிய கலாச்சார விழா நடக்க இருப்பது பற்றியும், அதற்கான பொறுப்புகளை ராஜீவ் சேத்தியிடம் ஒப்படைத்து இருப்பதாகவும் கூறிவிட்டு புறப்பட்டு விட்டார்.

ராஜீவ் போனவுடன், அறையில் ராஜிவ் சேத்தியின் அதிகாரம் கொடிகட்டி பறந்தது. எல்லா அதிகாரிகளுக்கும் ஆணையிட்டார். 'விழாவுக்காக துரிதமாக செயல் படுங்கள், அரசு இயந்திரத்தை முடுக்கி விடுங்கள். இந்திரா பிறந்த நாளும், நேரு பிறந்த நாளும் நவம்பர் மாதத்தில் வருகிறது. நவம்பர் மாதத்தில் விழாவை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வோம்" என்றார். "தேவையான நிதி நேரிடையாக வந்து சேரும்" என்று விளக்கினார்.

வந்திருந்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் குழம்பிப் போனார்கள். யார் இந்த ராஜீவ் சேத்தி? தெரியாதவர்கள் 'மண்டையைக் குடைந்து கொண்டார்கள். தெரிந்தவர்கள் வாளா இருந்தார்கள். அதிகார பூர்வமான உத்திரவு தான் அதிகாரிகளுக்கு தேவை. கிடைக்கும் என காத்திருந்தார்கள். ஊர் பேர் தெரியாத, எந்த அதிகாரத்திலும் இல்லாத ராஜீவ் சேத்தி அதைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை. ராஜீவே அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு போன பிறகு, அரசு உத்திரவு என்ன வேண்டிக் கிடக்கிறது. தொடர்ந்து முழங்கிவிட்டு திரும்பி போய்விட்டார் ராஜிவ் சேத்தி. வந்தவர்கள் தகவல் கேட்கவும் தெம்பு இன்றி திரும்பிப் போய் விட்டனர். 15 நாள் கழித்து, கலாச்சாரத்துறை இணை செயலர் மன்மோகன் சிங் இடமிருந்து கலாச்சார விழாவைப் பற்றி விபரமாக ஒரு செய்தி வந்தது. பிறகுதான் தெம்பே வந்தது, அதிகாரிகளுக்கு. மளமளவென்று காரியத்தில் இறங்கினர்.

படிப்பகம்

www.padippakam.com

ன்றிதழ் இல்லாமல் விழாவை
ர்க்க சென்றுவிட்டனர். அனாதை
ளாக விரட்டப்பட்டவர்கள் தங்கள்
திகாரிகள் திரும்பியபிறகு, இருப்
டங்களுக்கு திரும்பி இருக்கின்ற
ர். இவ்விழாவை முன்னின்று
டத்திய ராஜீவ் சேத்தி என்பவன்
கலைஞர்கள் போல் தீவிரவாதி
ள் உள்ளே நுழைந்து குண்டு
வைத்து விட்டால் என்ன செய்வது''
ன்று சீறியிருக்கிறான். "அதிகாரி
ள் உள்ளே போகிறார்களே''என்று
கட்டதற்கு மௌனமாகி விட்
ான்.

... நகரிக்குள்
... கலைஞர்களுக்கும்
...திருந்தது. "ஆர... ப
...றகு கலா நகரியில்
...போல தீவிரவாதி
...நது விட்டான்''—வேண்டும்
... புரளி கிளப்பி இருக்கின்றனர்.
...காப்பு படையினர், கலைஞர்
... கையுடன் எடுத்து வந்த அலங்
...ர பொருட்கள், பைகள் இவற்றை
...ு அணுவாக ஆராய்வதற்குத்
...் இந்த ஏற்பாடு. இதனால்
...த நேரத்திற்கு என்ன நடக்கும்
ன்று தெரியாமல் தங்கியிருந்த
லைஞர்களும் பீதியுடனே காலத்
...த்தனராம்.

... இவ்வளவு துன்பத்தையும்
...ங்கிக் கொண்டு, பிரதமரையும்
...வருடைய கூட்டத்தாரையும்மகிழ்
...த கலைஞர்களுக்கு நாளொன்
... கிடைத்த கூலி எவ்வளவு
...ரியுமா? வெறும் 35 ரூபாயி
...ருந்து 50 ரூபாய்தான். "100
...ாய் கொடுப்போம்'' எனக்கூறி
... வந்தவர்கள், இதிலும்
...கள் ... வரிசையைக் காட்டி
...ழ கலைஞர்களை ஏமாற்றினார்
ள்.

செலவு ரூபாய்பத்து கோடி என
...ணக்கு காண்பித்தவர்கள்கலைஞர்
...ளுக்கு கொடுத்த கூலியோ வெறும்
4 லட்சம். மீதிப்பணம், அதிகார
...ர்க்கம் அடித்த கும்மாளத்திற்கும்,
...ாங்கிய கமிஷனுக்கும் இரையாகிப்
...ானது. சுருட்டிய பணத்தால்,
...ள்குடித்த குரங்கு மாதிரி போதை
...லைக்கேறிப் போன கூட்டம்
...சய்த சேஷ்டைகள் எல்லாம்



கலா நகரியில்...

வழிகாட்டுதல் ஆனது. உளறியது எல்லாம் உத்திரவுகள் ஆகியது; எல்லாம்செயல்படுத்தப்பட்டது.

விளைவு, யானை புகுந்த பாத்திரக்கடை மாதிரி விழா நிகழ்சிகள் யாவும் தாறு மாறாக நொறுங்கி போனது. 10 கோடி ரூபாய் செலவில் மிஞ்சியது, கூச்சல், குழப்பம், குளறுபடிகள்தான்.

●

ரசிகர்களே இல்லை என்று தெரிந்தும் கலைஞர்கள் மிகவும் பொறுப்பாக நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தனர். வெட்ட வெளியில் அமர்ந்து கொண்டு பின்னிரவில் யார்தான் ரசிப்பார்கள். கடுங்குளிரைத் தாங்க முடியாமல் ரசிகர்கள் ஓடிவிட்டனர்.

ரசிகர்களுக்கோ நிழல் உருவங்கள்தான் தெரிந்தது. என்னநிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறதுஎன்பதை ஓரளவு ஊகித்தார்கள். வெறும் இரைச்சலைக் கேட்டு எரிச்சல் அடைந்தவர்கள்தான் ஏராளம்.

இதற்கு கலைஞர்களோ ரசிகர்களோ காரணம்அல்ல. நிர்வாகச் புலிகளான உயர்மட்ட அதிகாரிகள் தான் இவ்வளவு குளறுபடிகளையும் ஒழுங்காக செய்து கொண்டிருந்தார்கள்.

கிராமிய கலை நிகழ்ச்சிகளை தத்ரூபமாக சித்தரிக்க வேண்டும் என்று மேடைகளோ இல்லாமல் நிகழ்ச்சிகளை நடத்தச் சொன்னார்கள். உயரமான இடத்திலிருந்துபார்பதற்கு ரசிகர்களுக்கும் இட வசதி செய்யவில்லை. வெறும் கட்டாந்தரையும், புல் மேடுகளும், புழுதி மண்ணுமே, அனைவருக்கும் மேடையாக பயன்பட்டது.

இசை, பாட்டு, நடனம்இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகள்—எதையும் ரசிகர்களால் கண்டு களிக்க முடியவில்லை. தொடக்க நிகழ்ச்சி "சோபா யாத்திரா'' முதல் விழா முடியும் வரை இதுதான் நிலைமை. "ஏதோ நடந்தது'' "ஏதோ பார்த்தோம்'' — இப்படித்தான் சொன்னார்கள் ரசிகர்களும் கலைஞர்களும். கலர், கலராக போஸ்டர்களையும் தோரணங்களையும்தான் முழுமையாக பார்த்தனர் டில்லி மக்கள்.

ஐக்கியம், ஒருமைப்பாடு இவற்றுக்காக கூட்டப்பட்ட இம்மா பெரும் விழா, இப்படி புஸ்வாணமாகி போனதாலோ என்னவோ அதிகாரிகள் அவ்வப்போது சில அதிசயங்களை அனுமதித்தார்கள்.

பஞ்சாபிலிருந்து வந்திருந்த சாகர் என்ற தந்திர கலைஞர் திடீரென மக்கள் முன் தோன்றினார். வெவ்வேறு கலர்களைக் கொண்ட மூன்று 'கர்ச்சீப்'களை ஒரு குழாயில் திணித்தார். இப்படி, அப்படி அந்த குழாயை ஆட்டினார். இப்போது அந்த குழாயில் ஒரே ஒரு கலரில் ஒரு நீண்ட 'கர்ச்சீப்' மட்டுமே இருந்தது.

"இதே மாதிரி நாம் ஒன்றுபடுவோமானால், இந்தியாவை யாராலும் பிளவு படுத்த முடியாது'' என்று விளக்கம் கொடுத்தார்.

'இந்திய ஒருமைப்பாட்டிற்காக, மக்கள் தங்களை தியாகம் செய்யவும் தயங்கக் கூடாது' என்று ராஜீவ் கூறிக் கொண்டிருக்கிறார். இவரோ இவ்வளவு எளிதாகவே, தேசீய ஒருமைபாட்டை சாதிக்க முடியும் என்று ஆதாரத்துடன் கண்ணேதிரே விளக்குகிறார்! உயிர் பிழைத்தது என்று ரசிகர்கள் அவருக்கு நன்றி தெரிவித்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

# அரண்மனைத் திருவிழா

✱ எதுவுமே தெரியாமல் வெறுத்துப் போகும் போது ரசிகர்கள் கிராமிய வாசனையாவது நுகர்ந்துக் கொண்டிருக்கட்டும் என்று ஒரு ஏற்பாடு செய்தனர், விழாக் குழுவினர்.

கலைஞர்கள், நிகழ்ச்சி நடத்தும் இடத்தில் சாணம் பூசி மெழுகி வைத்தனர். இதற்காக தங்களையே பாராட்டிக் கொண்டனர். "விவசாய கூலிகளை வைத்தே இந்த (சாண) கடைசி பூச்சை செய்தோம்" என்றனர்.

இன்னும் சில அபூர்வ நிகழ்சிகளையும் ஏற்பாடு செய்ய முயற்சித்தார்கள். ஆனால் அதற்கு சிலர் முட்டுகட்டை போட்டுவிட்டனர்.

ஆரம்ப விழா சோபனா யாத்திராவில் கலந்து கொள்ளும் கலைஞர்களின் கையில் ஆளுக்கொரு 'டார்ச்'சை கொடுத்து விழாவையே ஒளி வெள்ளத்தில் மூழ்கடிக்க நினைத்தார், விழா பொறுப்பாளர் சேத்தி. இதற்காக, யூனியன் கார்பைட் நிறுவனத்தின் ஒரு பிரிவில் 4000 டார்ச்சு லைட்டுகளுக்கு ஆர்டர் கொடுக்கவும் ஏற்பாடு செய்தார். மன்மோகன் சிங் என்ற இன்னொரு அதிகாரி, சேத்தியின் கலை உணர்வை புரிந்து கொள்ளவில்லை. "டார்ச்சை கையில் கொடுத்து கலைஞர்களை, காவலர்களாக மாற்றி விடாதீர்கள்" என்றார். திட்டமே கைகழுவப்பட்டது.

இவ்விழாவைப் பற்றி உயர் மட்டத்திலிருந்தவர்களே நிறைய பேர் குறைபட்டுக் கொண்டார்கள். 'நிர்வாகத் திறமையின்மை, அதிகார துஷ்பிரயோகம், மொத்தனம், தேவையற்ற இடைஞ்சல், விழாவில்மலிந்துஇருந்தது', "விழா ஏற்பாடு, மொத்தத்தில் சரியான விதத்தில் திட்டமிடப்படவில்லை" என்றனர். இதைக் கேட்டதும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது சேத்திக்கு. அவர் சொன்னார் "திட்டமிட்டு செய்தால் அது கலையே அல்ல"— கேள்விகேட்டவர்கள், வேறு வழியில்லாமல் எச்சிலை உள்ளே விழுங்கி கொண்டார்கள்.

"மாபெரும் நுண்கலை வல்நுனர், ராஜீவையே அலங்கரிக்கும் ஒப்பனைக் கலைஞர், மணிசங்கர் ஐய்யர் அவர்களுக்குத் தெரியாத கலையா?" இப்படி கேள்வி கேட்கத்தான் நினைத்திருப்பார் சேத்தி. இருந்தாலும், அந்தஸ்த்து குறைந்தவர்களிடம் அதிகமாகபேசுவதைத்தவிர்க்கவே, சுருக்கமாக விளக்கி எதிரிகளை மூக்குடைத்து விட்டார்.

ராஜீவின் வலது கரமாகவும், மணிசங்கர் அய்யரின் இடது கரமாகவும் செயல் பட்டு காரியத்தை முடித்தார் சேத்தி. இப்படி ஆள், ஆளுக்கு உடலை பங்கிட்டு கொடுத்து விட்ட பிறகு சேத்தியை குறை சொல்லி என்ன புண்ணியம்? தைரியம் உள்ளவர் இவரை உபயோகப் படுத்தியவர்களைத்தானே எதிர்க்க வேண்டும்?

●

அப்னா உத்சவ் என்றால் நமது விழா என்று அர்த்தம். அந்த விதத்தில், டில்லி தர்பாரில் உள்ள அரண்மனைநாயகர்கள் தம் சுற்றத்தாருடன் இதைக் கண்டு களித்து குதூகலம் அடைந்துள்ளார்கள். இது அவர்கள் திருவிழா. இது நம் எதிரிகள் திருவிழா.

நமக்கும் ஒரு விழா உண்டு, புரட்சி! அது நம்மவர் திருவிழா. "மக்களின் திருவிழா!" வெகு விரைவில் ஆரம்பமாகும். அது, அரண்மனை மகுடங்களின் அந்தப்புர லீலைகளுக்கு பலியான எமது சகோதரிகள், வஞ்சிக்கப்பட்ட எமது சகோதரர்கள் வைத்து விட்டு போகும் ரத்த கடனை பழி தீர்க்கும்.

●

## நாய்களை வேட்டையாடும் நாய்கள்!

"பீகாரில் நிலைமை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு மோசமாக இருக்கிறது. மாவோயிஸ்டுகம்யூனிஸ்ட் சென்டர் (எம்.சி.சி) என்ற மா-லெபுரட்சிகரக் கட்சியின் தலைமையில் விவசாயிகள் இயக்கம்
[illegible] வ
கிறது. பீகார் [illegible] ந்
திருக்கிறது.
போலீஸ் அராஜகம் [illegible]
கிறது. இதை நான் [illegible]
கத் தேவையில்லை. [illegible]
சம்பவங்களை உதாரணங் [illegible]
சொல்கிறேன், நீங்கள் [illegible]
கொள்ள முடியும்.

புரட்சிகர இயக்கம் [illegible]
வாக்குப் பெற்றுள்ள கிராமங்க [illegible]
புரட்சியாளர்களையும் முன்ன [illegible]
விவசாயிகளையும் தேடிப்பிடி [illegible]
போலீஸ் இரவு நேர ரோந்துக [illegible]
ஈடுபடுகிறது. அப்போது நாய்கள் குரைத்து விட்டால் தாங்கள் தேடி வரும் நபர்கள் உஷாராகித் தப்பி விடுவார்கள் என்பதால் [illegible]
புறத்து நாய்களை எல்லாம் [illegible]
கொல்கிறது [illegible]கார் போலீஸ் [illegible]

ஒரு [illegible]
காளை ஒன் [illegible]
டிருந்தான் [illegible]
அவ்வாறு செய்வது ஆபத்தான [illegible]
என்று எச்சரித்தார் அங்கே நின் [illegible]
ருந்த ஒரு விவசாயி. போ [illegible]
காரன் இதைக் காதில் போ [illegible]
கொள்ளவில்லை. விவசாயி
சொன்னபடியே காளை அவனை
முட்டித் தள்ளியது. [illegible]த்தி
மடைந்த அந்த போலீஸ்க [illegible]
மாட்டைச் சுடவில்லை, மா [illegible]
எச்சரித்த விவசாயியை [illegible]
இடத்தில் அடித்தே கொன்றா [illegible]

இப்படியெல்லாம் கூட ந [illegible]
முடியுமா என்று நீங்கள் ஆச்ச [illegible]
படலாம். ஆனால் இதுதான் இ [illegible]
றைய பீகார்.

5000 ஏக்கர் [illegible]
பண்ணைகளிடமிருந்து பறித்தெடுத்து தங்கள் உரிமையை நிலைநாட்டியிருக்கிறார்கள் உழைக்கும் விவசாயிகள். மேலும் 5000 ஏக்கர் நிலங்களைக் கைப்பற்றப் போராட்டம் நடக்கிறது. இந்நிலையில் எதிரியைப் பலவீனப்படுத்த வேண்டுமானால், இங்கே அரசியல் இயக்கங்களையும் போராட்டங்களையும் கட்டுங்கள். இது தா[illegible] தோழர்களே, நீங்கள் எமக்குச் செய்யும் உதவியாக இருக்க முடியும்"

(25-11-86 அன்று சென்னையி[illegible] அகில இந்தியப் புரட்சிகரப் ப[illegible] பாட்டு மையம் (AILRC) நடத்தி[illegible] அறைக்கூட்டத்தில் பீகார்பிரதிநி[illegible] ஆற்றிய உரையிலிருந்து.)

படிப்பகம்